### 1138. திவாகர வரலாறு

வருநல் கங்கை வடதிசைப் பெருமையும்
தென்திசைச் சிறுமையும் நீக்கிய குறுமுனி
குண்டிகைப் பழம்புனல் காவிரிப் பெரும்பதி
அம்பர்க்கு அதிபதி சேந்தன் திவாகரத்து
ஆறாவது பல்பொருள் பெயர்த் தொகுதி முற்றும்.

கங்கை வடதிசைப் பெருமையுந் தென் றிசை
சிறுமையு நீக்கிய குறு முனி குண்டிகைப்
பழம்புனற் காவிரிப் பெரும்பதி யம்பர்க்
கதிபதி சேந்தன் றிவாகரத் தாறாவது
பல்பொரு ளுரைக்கும் பெயர்த்தொகுதி முற்றும்.

அதிபதி சேந்தன் தெரிந்த திவாகரத்
தாறாவது பல்பொருட் பெயர்த்தொகுதி முற்றும்.

இயற்கை வடிவாந் தொகுதியாறு முற்றும். (114)

ஏழாவது

# செயற்கைவடிவின் பெயர்த்தொகுதி

*ஏழாவது*

# செயற்கைவடிவின் பெயர்த்தொகுதி

## 1139. செயற்கை வடிவாவன

*எண்ணிய எழுவகை உலோகத்தின் மரத்தின்*
*மண்ணின் தோலின் நூலின் மற்றும்*
*திண்மைசெய் வடிவே செயற்கைவடிவு ஆகும்.*

**செயற்கை வடிவாவன :** எழுவகை உலோகம், மண், தோல், நூல் முதலியவற்றால் திண்மையாகச் செய்யப்படும் வடிவம். (1)

## 1140. சூலத்தின் பெயர்

*கழுமுள், மூவிலைவேல், முத்தலைக் கழுஎன*
*வருபவை **சூலப்படை** என வழங்கும்.*

**சூலத்தின் பெயர் :** *(3)*

*1.* குழுமுள், *2.* மூவிலைவேல், *3.* முத்தலைக் கழு.

**பாடவேறுபாடு—விளக்கம்**

முத்தலைக் கழு எனப்பாடங்கொண்டு முத்தலை கழு என இரு பெயராகக் கொள்வர்.

**தலைப்பு :** சூலப்படையின் பெயர்

1 : 4 கழுச்சத்தி—அச்சுப்பிரதி. (2)

## 1141. மழுவின் பெயர்

*பரசு, கணிச்சி, நவியம், பாலம்என*
*உரைசெய்வர் மழுவுக்கு உணர்ந்திசி னோரே.*

மழுவின் பெயர் : (4)

1. பரசு, 2. கணிச்சி, 3. நவியம், 4. பாலம்.

பாடவேறுபாடு – விளக்கம்

1 : 3—4 நவியம் தண்ணம்

2 பாலமென் றைந்து மழுவின் பெயரே—அங்குப்பிரதி (3)

## 1142. சக்கரத்தின் பெயர்

திகிரி, நேமி, ஆழி, வளை, எஃகம்,
சுதரிசனம், பருதி, சக்கரத்து உறு பெயர்.

சக்கரத்தின் பெயர் : (7)

1. திகிரி, 2. நேமி, 3. ஆழி, 4. வளை, 5. எஃகம், 6. சுதரிசனம், 7. பருதி.

பாடவேறுபாடு—விளக்கம்

2 : 2 பரிதி (4)

## 1143. வில்லின் பெயர்

சிலை, தனு, வேணு, கார்முகம், சாபம்,
முனியே, சார்ங்கம், சராசவம், பிருகம்,
கோதண்டம், தவர், கொடுமரம் என்று இவை
வார் வில் என்பர் மதிநூல் புலவர்.

வில்லின் பெயர் : (12)

1. சிலை, 2. தனு, 3. வேணு, 4. கார்முகம், 5. சாபம், 6. முனி, 7. சார்ங்கம், 8. சாராசனம், 9, பிருகம், 10. கோதண்டம், 11. தவர், 12. கொடுமரம்.

பாடவேறுபாடு—விளக்கம்

3 : 3—4 கொடுமரந் துரோணம், கொடுமரங்
காண்டீபம், காண்டீபம் கொடுமரம், துரோணங்
கொடுமரம்

4 : 1 வாரம் வில் (5)



## 1144. சிவன் வில்லின் பெயர்

பினாகம் பிஞ்ஞுன் பெருஞ்சிலைப் பெயரே

சிவன் வில்லின் பெயர் : (1)

1. பினாகம். (6)

## 1145. திருமால் வில்லின் பெயர்

சார்ங்கம் மாயோன் தனுவின் பெயரே.

திருமால் வில்லின் பெயர் : (1)

சார்ங்கம். (7)

## 1146. அம்பின் பெயர்

பகழி, வாளி, வண்டு, பாணம்,
(நிகழ்) சரம், பாத்திரம், சிலீமுகம், பல்லம்,
புங்கம், கணை, குதை, கங்க பத்திரம்,
அத்திரம், தோணி, கோல், விசிகம், அம்பே.

அம்பின் பெயர் : (16)

1. பகழி, 2. வாளி, 3. வண்டு, 4. பாணம், 5. சரம், 6. பத்திரம், 7. சிலீமுகம், 8. பல்லம் 9. புங்கம், 10. கணை, 11. குதை, 12. கங்கபத்திரம், 13. அத்திரம், 14. தோணி, 15. கோல், 16. விசிகம்.

பாடவேறுபாடு—விளக்கம்

2 : 2 போத்திரம், வேத்திரம், சித்திரம், பத்திரி —அச்சுப்பிரதி.

3 : 4. பத்திரங் கணைபுங்கங் குறைகங்க பத்திரம்
அத்திரந் தோணி விசிக மம்பே.
பத்திரம் புங்கன் கணைகுதை கங்க
பத்திர மாசுக மார்க்கண மத்திரம்
தோணி சாயகம் விசிக மம்பே. (8)

## 1147. மரக்கோலின் பெயர்

**மரக்கோலின் பெயர்**

உடுவே **மரக்கோல்.**

**மரக்கோலின் பெயர் :** (1)

உடு

**பாடவேறுபாடு - விளக்கம்**

*தலைப்பு : அம்புக் கழியின் பெயர்.*

*அச்சுப் பிரதிப் பாடம் பின்வருமாறு:*

*அப்புத் தலையின் பெயர் :*

*உடுவம் புத்தலை* (9)

## 1148. மொட்டம்பின் பெயர்

உ தண், **மொட்டம்பே.**

**மொட்டம்பின் பெயர் :** (1)

**உதண்.**

**பாடவேறுபாடு—விளக்கம்**

*மரக்கோலுக்கும் மொட்டப்புக்கும் பெயர் என்னும் தலைப்பில் 1147, 1148 ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் சிலர் கொள்வர்.* (10)

## 1149. அம்புக்குதையின் பெயர்

புங்கம், **அம் பின்பகழி**

**அம்புக் குதையின் பெயர் :** (1)

புங்கம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

*தலைப்பு : அம்புத்தரத்தின் பெயர்*

*புங்கமம் பின் குதை* (11)

## 1150. அம்புக்கட்டின் பெயர்

புதை, **அம்புக் கட்டே.**

**அம்புக்கட்டின் பெயர் :** (1)

புதை



**பாடவேறுபாடு—விளக்கம்**

*அம்பின் குதைக்கும் அம்புக்கண்டுக்கும் பெயர் என்னும் தலைப்பில் 1149, 1150 ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாகவும் சிலர் கொள்வர்.*

*புங்கம் பகழி புதையப்புக் கட்டே — என்பது ஓர் ஏட்டின் பாடம்.* (12)

## 1151. வேலின் பெயர்

சத்தி, எஃகம், உடம்பிடி, குந்தம்,

விட்டேறு, அரணம், ஞாங்கர், அயிர், **வேல்.**

**வேலின் பெயர் :** (8)

*1. சத்தி, 2. எஃகம், 3. உடம்பிடி, 4. குந்தம் 5. விட்டேறு, 6. அரணம், 7. ஞாங்கர், 8. அயில்.* (13)

## 1152 கைவேல் விகற்பத்தின் பெயர்

கப்டணம், தோமரம், **கைவேல் விகற்பம்.**

**கைவேல் விகற்பத்தின் பெயர் :** (2)

*1. கப்பணம், 2. தோமரம்.*

**பாடவேறுபாடு—விளக்கம்**

*தலைப்பு : கைவேலின் பெயர்.*

*3—4 குந்தன் கைவேல்.* (14)

## 1153. வச்சிராயுதப் பெயர்

சம்பம், வயிரப்படை, குலிசம், **வச்சிரம்.**

**வச்சிராயுதப் பெயர் :** (3)

*1. சப்பம், 2. வயிரப்படை, 3. குலிசம்.* (15)

## 1154. வாளின் பெயர்

நாந்தகம், கட்கம், நவிர், ஏதி, கண்டகம்,

(ஏய்ந்த) வேணு, வஞ்சம், நாட்டம்,

கடுத்தலை, உவணி, கரவாளம், கோணமோடு

(அடுத்தன) வசியே **வாள்** என அறைநர்.

**வாளின் பெயர் :** (13)

1. நாந்தகம், 2. கட்கம், 3. நவிர், 4. ஏதி, 5. கண்டகம், 6. வேணு, 7. வஞ்சம், 8. நாட்டம், 9. கடுத்தலை, 10. உவணி, 11. கரவாளம், 12. கோணம். 13 வசி.

**பாடவேறுபாடு—விளக்கம்**

1 : 1 நாந்தம், 4. கண்டம்

2 : 1—2 கடுந்தலை யுவணி

4 . 2 வசியொடு (16)

## 1155. ஈர்வாளின் பெயர்

வேதினம், கரபத்திரம் இவை ஈர்வாள்.

**ஈர்வாளின் பெயர் :** (2)

1. வேதினம், 2. கரபத்திரம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

வேதி னங்கர பத்திர மீர்வாள். (17)

## 1156. உடைவாளின் பெயர்

சுரிகை, உடைவாள்.

**உடைவாளின் பெயர் :** (1)

சுரிகை (18)

## 1157. கழுக்கடையின் பெயர்

கழுமுள், கழுக்கடை

**கழுக்கடையின் பெயர் :** (1)

கழுமுள்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : தகுவாளின் பெயர்.

உடைவாளுக்கும் கழுக்கடைக்கும் பெயர் என்னும் தலைப்பில் 1156. 1157 ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் சிலர் கொள்வர். 1155 ஆம் நூற்பா சில பிரதிகளில் இதன் பின்னர் வருகிறது. (19)



## 1158. கொடுவாளின் பெயர்

குயமும், புள்ளமும், கொடுவாள் ஆகும்.

**கொடுவாளின் பெயர் :** (2)

1. குயம், 2. புள்ளம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : அரிவாளின் பெயர், பன்னரிவாளின் பெயர்.

3—4 கொடுவாகு கரிவாள். (20)

## 1159. பிண்டிபாலத்தின் பெயர்

பீலிதண்டு, எஃகம், பிண்டி பாலம்.

**பிண்டிபாலத்தின் பெயர் :** 2

1. பீலிதண்டு, 2. எஃகம்,

**பாடவேறுபாடு—விளக்கம்**

1 பீலித்தண்டு (21)

## 1160. கணையமரத்தின் பெயர்

பரிசமும், எழுவும் கணையப் படைக்கலம்

**கணையமரத்தின் பெயர் :** (2)

1. பரிகம், 2. எழு.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : கணையப் படைக்கலத்தின் பெயர் (22)

## 1161. தண்டாயுதத்தின் பெயர்

கதை, தடி, தண்டு ஆம்.

**தண்டாயுதத்தின் பெயர் :** (2)

1. கதை, 2. தடி.

**பாடவேறுபாடு—விளக்கம்**

கதை தடி தெண்டு தண்டாயுதமே. (23)

### 1162. இருப்புலக்கையின் பெயர்

முசலம், **இருப்புலக்கை**

**இருப்புலக்கையின் பெயர் :** முசலம்

**பாடவேறுபாடு—விளக்கம்**

தண்டாயுதத்துக்கும் இருப்புலக்கைக்கும் பெயர் என்னும் தலைப்பில் 1161. 1162 ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் சிலர் கொள்வர். (24)

### 1163. முற்கராயுதத்தின் பெயர்

**முற்கரம்,** காத்திரி, கூர்த்திகை, முசுண்டி

**முற்கராயுதத்தின் பெயர் :** (3)

1. காத்திரி, 2. கூர்த்திகை, 3. முசுண்டி.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : முற்சரத்தின் பெயர், முசுண்டியின் பெயர்.

2 : 3 காத்திரம் கூத்திசை. (25)

### 1164. மட்டிப்படைக்கலத்தின் பெயர்

சட்டகம், சங்கு, **மட்டிப் படைக்கலம்.**

**மட்டிப்படைக்கலத்தின் பெயர் :** (2)

1. சட்டகம், 2. சங்கு.

**பாடவேறுபாடு—விளக்கம்**

1. சட்டம், பட்டம், 2. சங்கம் 3. மட்டமும், மட்டியும்.

மட்டிப் படைக்கலம் சம்மட்டி போல்வதோர் ஆயுதம் எனக் குறிப்புத் தருகிறார் முதற்பதிப்பாசிரியர்.

1163, 1164 ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாக மட்டிப் படைக்கலத்தின் பெயர் என்னும் தலைப்பில் அச்சுப் பிரதி தந்துள்ளது. (26)



### 1165. கணிச்சி என்னும் பெயர்

உளிக்கருவி, தறிக்கருவி என்றே உரைப்பன
**கணிச்சிப்** பெயரின் வழங்கும் கருவி.

**கணிச்சி என்னும் பெயர் :** (2)

1. உறிக்கருவி, 2. தறிக்கருவி.

**பாடவேறுபாடு—தலைப்பு**

தலைப்பு : உளியின் பெயர், உளிக்குந் தறிகைக்கும் பெயர்—அச்சுப்பிரதி.

2—4 தறிகைக் கருவியென்றிசைப்பன, 3—4 கருவியென்றிசைப்பனவே. (27)

### 1166. இலைமூக்கரிகத்தின் பெயர்

குளிரி, **இலைமூக் கரிகத்தி** ஆகும்.

**இலைமூக்கரிகத்தியின் பெயர் :** (1)

குளிரி

**பாடவேறுபாடு—தலைப்பு**

தலைப்பு : மூக்கரிகத்தின் பெயர், இலைக்காம்பரி கருவியின் பெயர்.

1. குளரி, 2. குலைமூக்

'குளிரிலை மூக்கரி கத்தி யாகும்' எனப்பாடங் கொண்டு இலைமூக்கரிகத்தியின் பெயர் : குளிர் என்று அச்சுப் பிரதி கொள்கிறது. இங்கு முதற் பதிப்பாசிரியர், "நிகண்டாசிரியர்களுள் ஒரு சார் கோட்பாடு பற்றி இவ்வாறு பிரிக்கப்பட்டிருப்பினும் மற்றொரு சாரார் கோட்பாடு பற்றிப் பிரிக்கப்படுமாறு — மூக்கரிகத்தியின் பெயர் குளிர் இலை ஆக 2 " என்று குறிப்புத் தந்துள்ளார். (28)

### 1167. நாராசப் பெயர்

சலாகை, **நாராசம்.**

நாராசப் பெயர் : (1)
சலாகை

பாடவேறுபாடு—விளக்கம்
தலைப்பு : நாராசத்தின் பெயர். (29)

## 1168. இருப்புமுள்ளின் பெயர்

தாறு, இருப்பு முள்ளே.

இருப்புமுள்ளின் பெயர் : (1)
தாறு.

பாடவேறுபாடு—விளக்கம்
நாராசத்துக்கும் இருப்பு முள்ளுக்கும் பெயர் என்னும் தலைப்பில் 1167, 1168 ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் சிலர் கொள்வர். (30)

## 1169. கவணின் பெயர்

தழல், தட்டை, கவணை, கல்எடு கவணே.

கவணின் பெயர் : (3)
1. தழல், 2. தட்டை, 3. கவணை. (31)

## 1170. ஆயுதப்பொதுப் பெயர்

படைக்கலம், தானை, கடுமுள், சுதனம்,
படை, ஏதி, துப்பு, கழுமுள் அதனோடு,
(அடல் வெங்) கருவி, ஆயுதப் பெயரே.

ஆயுதப்பொதுப் பெயர் : (9)
1. படைக்கலம், 2. தானை, 3. கடுமுள், 4. சுதனம், 5. படை, 6. ஏதி, 7. துப்பு, 8. கழுமுள 9. கருவி.

பாடவேறுபாடு—விளக்கம்
தலைப்பு :—ஆயுதப் பொதுவின் பெயர்.
1 : 4 சாதனம்
2 படையே துப்புக் கழுமு ளேதியோடு
[1] : 1—2 பார்த்திகை கூர்த்திகை (32)



## 1171. ஆயுதக்கூர்மையின் பெயர்

வள், அயில், நுதி, நுனை, வை, ஆர், நிசிதம்,
அள், வசி, வயிரம், பூ, அவற்றின் கூர்மை.

ஆயுதக்கூர்மையின் பெயர் : (11)
1. வள், 2. அயில், 3. நுதி, 4. நுனை, 5. வை 6. ஆர், 7. நிசிதம், 8. அள், 9. வசி, 10. வயிரம், 11. பூ.

பாடவேறுபாடு—விளக்கம்
தலைப்பு : கூர்மையின் பெயர் (33)

## 1172. முனையின் பெயர்

நுதியும், நுனையும், நுனியும், முனை ஆம்.

முனையின் பெயர் : (3)
1. நுதி, 2. நுனை, 3. நுனி.

பாடவேறுபாடு—விளக்கம்
தலைப்பு : நுனியின் பெயர்.
நுதியு நுனையு நுனியா கும்மே. (34)

## 1173. படையுறையின் பெயர்

தடறும், கருவிய புட்டிலும், படையுறை.

படையுறையின் பெயர் : (2)
1. தடறு, 2. கருவிப் புட்டில்

பாடவேறுபாடு—விளக்கம்
தலைப்பு : ஆயுதவுறையின் பெயர், உறையின் பெயர் (35)

## 1174. அம்புக்கூட்டின் பெயர்

ஆவமும், தூணியும், ஆவ நாழியும்,
அம்புபெய் கூடு என்று அறையப்படுமே.

அம்புக் கூட்டின் பெயர் : (3)
1. ஆவம், 2. தூணி, 3. ஆவநாழி.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு: அம்புபெய்கூட்டின் பெயர், அம்பறாத் தூணியின் பெயர்.

3—4 நறையல் வேண்டும். (36)

## 1175. மெய்புகு கருவியின் பெயர்

அரணம், சாலிகை, ஆசு, பரணம்,
கவசம், கண்டம், மெய்யுறை, தம்பம்,
கசையே, சுரிகை, மெய்புகு கருவி,
பரமும் பாரமும் அப்பெயர்ப் பால.

**மெய்புகு கருவியின் பெயர்:** (12)

1. அரணம், 2. சாலிகை, 3. ஆசு, 4. பரணம், 5. கவசம், 6. கண்டம், 7. மெய்யுறை, 8. தம்பம், 9. கசை, 10. சுரிகை, 11. பரம், 12. பாரம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு: கவசத்தின் பெயர்.

4 : 1—2 பாரமும், பரமும், பரமு மபரமும்.

4 ஆம் அடியை, 'மற்றுங் கவசத்தின் பெயர்' என்னும் தலைப்பில் தனி நூற்பாவாக அச்சுப் படி தந்துள்ளது. (37)

## 1176. தலைக்கருவியின் பெயர்

சிரகம், சிக்கம், தலைக்கருவி ஆகும்.

**தலைக்கருவியின் பெயர்:** (2)

1. சிரகம், 2. சிக்கம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

1 சீரகம்

சிரகஞ் சிக்கஞ் சக்கந் தலைக்கட்டே. (38)

## 1177. கேடகத்தின் பெயர்

சேடகம், வட்டம், தோலே, வேதிகை.
கேடகம், பலகை ஆம் எனக் கிளப்பர்.



**கேடகத்தின் பெயர்:** (5)

1. சேடகம், 2. வட்டம், 3. தோல், 4. வேதிகை, 5. பலகை.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு: பலகையின் பெயர்.

2 : 2 பரிசை. (39)

## 1178. மாவட்டணத்தின் பெயர்

கட்டியம், பலகை, தட்டு, மா வட்டணம்.

**மாவட்டணத்தின் பெயர்:** (3)

1. கட்டியம், 2. பலகை, 3. தட்டு.

**பாடவேறுபாடு—விளக்கம்**

1. தட்டியம் 4. வட்டணை. (40)

## 1179. பரிசையின் பெயர்

தோற்பரம், தோற்பலகை, தோலே, பரிசை.

**பரிசையின் பெயர்:** (3)

1. தோற்பரம், 2. தோற்பலகை, 3. தோல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு: தோற்பலகையின் பெயர்.

3—4 தோலு மாகும். (41)

## 1180. கைக்கட்டியின் பெயர்

கைப்புடை, கோதை, கைக்கட்டி ஆகும்.

**கைக்கட்டியின் பெயர்:** (2)

1. கைப்புடை, 2. கோதை. (42)

## 1181. பக்கரையின் பெயர்

சுவடு, பக்கரை எனச் சொல்லுவர்.

**பக்கரையின் பெயர்:** (1)

சுவடு

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : பக்கறையின் பெயர்
சுவடு பச்கறைப் பேரெனச் சொல்லுவர்.
இந்த நூற்பாச் சில பிரதிகளில் இல்லை. (43)

## 1182. கலனையின் பெயர்

பல்லணம், பருமம், படை, பரம், கருவி,
(சொல்லற்கு உரிய) பண், **கலனைத்** தொடர்பே.

**கலனையின் பெயர் :** (6)

1. பல்லணம், 2. பருமம் 3. படை, 4. பரம் 5. கருவி, 6. பண்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : குதிரைக்கலனையின் பெயர், குதிரைக் கருவியின் பெயர்.
2 : 2—3 சூரிய கலணைத் (44

## 1183. குதிரைவாய்க்கருவியின் பெயர்

கலினமும், கறுழும் **குதிரைவாய்க் கருவி.**

**குதிரைவாய்க்கருவியின் பெயர் :** (2)

1. கலினம், 2. கறுழ்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : கடிவாளத்தின் பெயர்.
1—2, கலினங் கலுறாங் (45)

## 1184. குசைக்கயிற்றின் பெயர்

வற்கம், **குசைக் கயிறு.**

**குசைக்கயிற்றின் பெயர் :** (1)

வற்கம். (46)

## 1185. சம்மட்டியின் பெயர்

மத்திகை, **சம்மட்டி.**



**சம்மட்டியின் பெயர் :** (1)

மத்திகை

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : குதிரைச் சம்மட்டியின் பெயர், குதிரை செலுத்துங்கோலின் பெயர்.

குசைக்கயிற்றுக்கும் சம்மட்டிக்கும் பெயர் என்னும் தலைப்பில் 1184, 1185 ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் சிலர் கொள்வர். (47)

## 1186. கழுத்திடு கயிற்றின் பெயர்

கவடும், புரோசையும் **கழுத்திடு கயிறே.**

**கழுத்திடு கயிற்றின் பெயர் :** (2)

1. கவடு, 2. புரோசை.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : யானைக் கழுத்திடு கயிற்றின் பெயர், புரோசைக் கயிற்றின் பெயர், புரசைக் கயிற்றின் பெயர். (48)

## 1187. தளையின் பெயர்

நிகளமும், விலங்கும், தொடரும், **தளையே.**

**தளையின் பெயர் :** (3)

1. நிகளம், 2. விலங்கு, 3. தொடர்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : விலங்கின் பெயர். (49)

## 1188. பற்றிரும்பின் பெயர்

பறனை, பறளிகை, அள்ளு, வலி, **பற்றிரும்பே.**

**பற்றிரும்பின் பெயர் :** (4)

1. பறனை, 2. பறளிகை, 3. அள்ளு, 4. வலி.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : அள்ளிரும்பின் பெயர்.
2—3 கற்பொறி புள்வலி. (50)

### 1189. கிண்கிணி மணியின் பெயர்

பரிபுரம், நூபுரம், பரியகம், என்ன
வருபவை பாத கிண்கிணி மணியே.

**கிண்கிணி மணியின் பெயர் : (3)**

1. பரிபுரம், 2. நூபுரம், 3. பரியகம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : பாதகிங்கிணியின் பெயர்.
1 : 4 மென்று
2 : 3 கிங்கிணி (51)

### 1190. சிலம்பின் பெயர்

பரிபுரம், நூபுரம், (பைம்பொன்) ஞெகிழி
அரிபெப் சிலம்பு என்று அறையல் வேண்டும்.

**சிலம்பின் பெயர் : (3)**

1. பரிபுரம், 2. நூபுரம், 3. ஞெகிழி.

**பாடவேறுபாடு—விளக்கம்**

1 : 2 அரவம்
2 : 2—4 சிலம்பென வறைந்தனர் புலவர். (52)

### 1191. அரக்குடைச் சிலம்பணியின் பெயர்

அரதனம், ஞெகிழி, அரக்குடைச் சிலம்பணி.

**அரக்குடைச் சிலம்பணியின் பெயர் : (2)**

1. அரதனம், 2. ஞெகிழி.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : அரக்குடைச்சிலம்பின் பெயர்.
1 அரியகம் 4. சிலம்பே. (53)

### 1192. காலணி மணிவடத்தின் பெயர்

பார சாலம், கால்அணி மணிவடம்.

**கால்அணி மணிவடத்தின் பெயர் : (1)**

பாதசாலம்.



**பாடவேறுபாடு - விளக்கம்**

தலைப்பு : கால்மணி வடத்தின் பெயர். (54)

### 1193. பாடகத்தின் பெயர்

பாத கடகம், பாடகம் ஆகும்.

**பாடகத்தின் பெயர் : (1)**

பாத கடகம். (55)

### 1194. ஆடவர் காலணிவடத்தின் பெயர்

கெழுதகை யம்பர் கிழவோன் சேந்தனின்
விழைவுறு தியாகத்து வீரத்து வீக்கிய
கழலே ஆடவர் கால்மிசை அணிவடம்.

**ஆடவர் காலணி வடத்தின் பெயர் : (1)**

கழல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : கழலென்னும் பெயர், வீரக்கழலின் பெயர்
1 : 2 யம்பற்
2 : 2—3 தியாகத்தில் வீரத்தில்
3 : 3—4 காலணி மிசைவடம்

இதன்பின் அச்சுப்பிரதியில், மேகலை முதலியவை வகை யாவன என்னும் தலைப்பில் பின்வரும் நூற்பா ஒன்று காணப்படுகிறது :

மேகலை காஞ்சி கலாபம் பருமம்
விரிசிகை யேழுமோ ரெட்டுமீ ரெட்டு
மூவா றுநாலெட்டு முறைக்கோவை மணியே.

இந்நூற்பா பழம் பிரதிகளில் இல்லை. (56)

### 1195. கலாபத்தின் பெயர்

கலாபம், விரிசிகை.

**கலாபத்தின் பெயர் :** (1)

விரிசிகை. (57)

## 1196. மேகலையின் பெயர்

காஞ்சி, **மேகலை.**

**மேகலையின் பெயர் :** (1)

காஞ்சி.

**பாடவேறுபாடு—விளக்கம்**

மேகலையின் பெயர் என்னும் தலைப்பில் கலாபம் விரிசிகை காஞ்சி.

மேகலை என 1195, 1196 ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் கொள்வர். இதனையே கலாபத்துக்கும் மேகலைக்கும் பெயர் என்னும் தலைப்பிலும் சிலர் கொள்வர். (58)

## 1197. அரைப்பட்டிகையின் பெயர்

மனாவே, கலை, **அரைப் பட்டிகை** ஆகும்.

**அரைப்பட்டிகையின் பெயர் :** (2)

1. மனா, 2. கலை.

**பாடவேறுபாடு—விளக்கம்**

1—2 மனாமே கலையரைப்

மனாவோ டத்தரைப் பட்டிகைப் பெயரே. (59)

## 1198. அரைநூலின் பெயர்

அரதனம், **அரைநூல்.**

**அரைநூலின் பெயர் :** (1)

அரதனம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : அரைநாணின் பெயர்.

1. இரதனம் (60)



## 1199. சதங்கையின் பெயர்

**சதங்கை,** கிண்கிணி.

**சதங்கையின் பெயர் :** (1)

கிண்கிணி.

**பாடவேறுபாடு—விளக்கம்**

2 கிண்கிணி

அரைநூலுக்குஞ் சதங்கைக்கும் பெயர் என்னும் தலைப்பில் 1198, 1199 ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் சிலர் கொள்வர். (61)

## 1200. பதக்கத்தின் பெயர்

**பதக்கம்** கண்டிகை, ஆரம் ஆகப் பகர்வர்.

**பதக்கத்தின் பெயர் :** (2)

1. கண்டிகை, 2. ஆரம். (62)

## 1201. மாதர் முலையணிவடத்தின் பெயர்

ஆரம், பதக்கம், கண்டிகை, மாலை,
கோவை, காசு, காழ்தாமம் என்றுஇவை
மாதர் **முலைமேல் அணிவடம்** ஆகும்.

**மாதர் முலையணிவடத்தின் பெயர் :** (8)

1. ஆரம், 2. பதக்கம், 3. கண்டிகை, 4. மாலை, 5. கோவை, 6. காசு, 7. காழ், 8. தாமம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

2 : 3 காசு தாமம்

3 : 2—3 மென்முலை மணிவட. (63)

## 1202. ஆபரணத்தின் கடைப்புணர்வின் பெயர்

கடையும், கயிலும் **பூணின் கடைப்புணர்வு.**

**ஆபரணத்தின் கடைப்புணர்வின் பெயர் :** (2)

1. கடை, 2. கயில்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : பூண்கடைப் புணர்வின் பெயர், பூண்முகப்பின் பெயர் :

1 மடையும்.

இதன் பின் முதற்பதிப்பாசிரியர் சேர்த்த புதுச் சூத்திரம் ஒன்று வருமாறு :

மற்றும் கடைப்புணர்வின் பெயர்.

74. ★ மடையு மதற்கு வகுக்கப் படுமே. (64)

## 1203. கடைப்புணர்வின் தூக்கத்தின் பெயர்

தொங்கலும், நிதியமும், **அவற்றின் தூக்கம்.**

**கடைப்புணர்வின் தூக்கத்தின் பெயர் :** (2)

1. தொங்கல், 2. நிதியம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : முகப்பின் தொங்கலின் பெயர், அவற்றின் தூக்கத்தின் பெயர், ஆபரணத்தொங்கலின் பெயர்.

2 நெதியமும், நிதியும், உத்தியும். (65)

## 1204. துடக்கு வடிவின் பெயர்

மதலிகை, தூக்கம், **துடக்கு வடிவே.**

**துடக்கு வடிவின் பெயர் :** (2)

1. மதலிகை, 2. தூக்கம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : துடக்கத்தின் பெயர்

3. தூக்கு. (66)

## 1205. தோளணியின் பெயர்

அங்கதம், கேயூரம், **தோளணி** ஆகும்.



**தோளணியின் பெயர் :** (2)

1. அங்கதம், 2. கேயூரம். (67)

## 1206. கங்கணத்தின் பெயர்

கடகமும், தொடியும், **கங்கணம்** ஆகும்.

**கங்கணத்தின் பெயர் :** (2)

1. கடகம், 2. தொடி. (68)

## 1207. கைவளையின் பெயர்

சங்கும், தொடியும், சூடகமும், சரியும்,

கன்றும், குருகும், வண்டும், **கைவளை.**

**கைவளையின் பெயர் :** (7)

1. சங்கு, 2. தொடி, 3. சூடகம், 4. சரி, 5. கன்று, 6. குருகு, 7 வண்டு.

**பாடவேறுபாடு—விளக்கம்**

3—4 கைவளை யாகும். (69)

## 1208. குண்டலத்தின் பெயர்

குழையே, மஞ்சிகை, காதணி, **குண்டலம்.**

**குண்டலத்தின் பெயர் :** (3)

1. குழை, 2. மஞ்சிகை, 3. காதணி.

**பாடவேறுபாடு—விளக்கம்**

2 மிஞ்சிகை, மிரிசிகை. (70)

## 1209. காதணியின் பெயர்

கடிப்பிணை, வல்லிகை, வேடகம், **காதிற்கு**

அணிப்பெயர் கொட்டையும் ஆகும் என்ப.

**காதணியின் பெயர் :** (4)

1. கடிப்பிணை, 2. வல்லிகை, 3. வேடகம் 4. கொட்டை.

**பாடவேறுபாடு—விளக்கம்**

2 : 2 தோடும்—அச்சுப்பிரதி. 4 என்பர்

இதனை அடுத்து முதற் பதிப்பாசிரியர் சேர்த்த புது நூற்பா வருமாறு :

**மற்றும் காதணியின் பெயர் :**

75. ★ கொட்டையு மதனைக் கூறுங் கிளவி. (71)

## 1210. சுட்டியின் பெயர்

**சுட்டி,** நுதற்சுடிகை.

**சுட்டியின் பெயர் :** (1)

நுதற்சுடிகை

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : நுதற்சுடிகையின் பெயர்

1 சுட்டிகை. (72)

## 1211. பட்டத்தின் பெயர்

**பட்டம்,** ஓடை.

**பட்டத்தின் பெயர் :** (1)

ஓடை.

**பாடவேறுபாடு—விளக்கம்**

சுட்டிக்கும் பட்டத்துக்கும் பெயர் என்னும் தலைப்பில் 1210, 1211 ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் சிலர் கொள்வர். (73)

## 1212. நெற்றியணியின் பெயர்

புல்லகம், இலம்பகம், **நுதல்மிசை அணிபூண்.**

**நெற்றியணியின் பெயர் :** (2)

1. புல்லகம், 2. இலம்பகம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : நுதலணியின் பெயர். (74)



## 1213. சிரமாலையின் பெயர்

கரோடிகை, **சிரமாலை**ப் பெயர்ஆகும்மே.

**சிரமாலையின் பெயர்** (1)

கரோடிகை.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : தலைமாலையின் பெயர், தலையணி மாலையின் பெயர்.

2 சிரோமாலைப்

2—4 சிரமாலைப்பெயராகும்.

3—4 பெயரெனக் கருதுவர், பெயரெனக் கழறுவர். (75)

## 1214. மணிமுடியின் பெயர்

சுடிகை, மௌலி, முடியே, சேகரம்,

மகுடம், கிரீடம், **மணிமுடி** என் .

**மணிமுடியின் பெயர் :** (6)

1. சுடிகை, 2. மௌலி, 3. முடி, 4. சேகரம், 5. மகுடம், 6. கிரீடம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : முடியின் பெயர், கிரீடத்தின் பெயர்.

1 : 2 மவுலி

2 : 4 யாகும். (76)

## 1215. பேரணிகலத்தின் பெயர்

பெரும்பூண், மதாணி, **பேரணி கலமே**

**பேரணிகலத்தின் பெயர் :** (2)

1. பெரும்பூண், 2. மதாணி.

**பாடவேறுபாடு—விளக்கம்**

4 பலனே. (77)

## 1216. ஆபரணப் பொதுப் பெயர்

பொலம், கலன், நாண், இழை, பூண், அணி, மதாணி
பொன்னினும் மணியினும் செய் ஆபரணம்.

**ஆபரணப் பொதுப் பெயர் : (7)**

1. பொலம், 2. கலன், 3. நாண், 4. இழை,
5. பூண், 6. அணி, 7. மதாணி. (78)

## 1217. உண்கலத்தின் பெயர்

தாலம், தட்டை, உண்கலன் ஆகும்.

**உண்கலத்தின் பெயர் : (2)**

1. தாலம், 2. தட்டை.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : கலத்தின் பெயர்.

2 தட்டகை

தாலந் தட்டத் தணிகை யுண்கலம்—அச்சுப்பிரதி. (79)

## 1218. கிண்ணத்தின் பெயர்

வள்ளம், கிண்ணம்.

**கிண்ணத்தின் பெயர் : (1)**
வள்ளம்.

**பாடவேறுபாடு- விளக்கம்**

தலைப்பு : கிண்ணம் அல்லது சிறுவட்டியின் பெயர்.

2 கிண்ணி.

இதனை அடுத்து முதற் பதிப்பாசிரியர் பாடிச் சேர்த்த புது நூற்பாக்கள் 14 வருமாறு :

**முடியுறுப்பாவன**

76. ★ தாம முகுடம் பதுமங் கோடகம்
கிம்புரி முடியுறுப் பைந்தெனக் கிளப்பர்.



**தோட்டின் பெயர்**

77. ★ தோடு தாடங்கம்.

**பிள்ளைக் கைவளையின் பெயர்**

78. ★ பிடிக மென்பது பிள்ளைக் கைவளை.

**ஓசை செய் தளையின் பெயர்**

79. ★ குடச்சூல் ஞெகிழ மோசை செய்தளை.

**செவிமலர்ப்பூவின் பெயர்**

80. ★ கன்னாவ தஞ்சஞ் செவிமலர்ப் பூவே.

**சரிமணியின் பெயர்**

81. ★ கலாபந் தோரை சரிமணிப் பெயரே.

**மோதிரத்தின் பெயர்**

82. ★ விரலணி யாழி விக மிலச்சினை
மோதிர மென்ன மொழியற் பால.

**வயிரச் சங்கிலியின் பெயர்**

83. ★ சங்கிலி வயிரச் சங்கிலி சாரும்.

**பூணுநூலின் பெயர்**

84. ★ உபவீதம் பூணுநூல்.

**தெய்வவுத்தியின் பெயர்**

85. ★ திருத்தெய்வுத்தி.

**தலைக்கோலத்தின் பெயர்**

86. ★ பிஞ்ஞகந் தலைக்கோலம்.

**தலைப்பாளையின் பெயர்**

87. ★ தலைப்பாளை தொய்யகம்.

**கல்லழுத்துங்குழிவட்டத்தின் பெயர்**

88. ★ கல்லழுத்துங் குழிவட்டம் கேவணம்.

**பூணின் பெயர்**

89. ★ கோளகை தாங்கி வயிரங் கிம்புரி
பூணின் பெயரெனப் போற்றல் வேண்டும். (80)

### 1219. வட்டிலின் பெயர்

**கோரம், வட்டில்,**

**வட்டிலின் பெயர் :** (1)

கோரம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

கிண்ணத்துக்கும் வட்டிலுக்கும் பெயர் என்னும் தலைப்பில் 1218—1219 ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் கொள்வர்.

(81)

### 1220. நாழிகை வட்டிலின் பெயர்

கன்னல், **நாழிகை வட்டில்** ஆகும்.

**நாழிகைவட்டிலின் பெயர் :** (1)

கன்னல்.

(82)

### 1221. சட்டுவத்தின் பெயர்

தவ்வி, சிலகம், தெறுவி, **சட்டுவம்.**

**சட்டுவத்தின் பெயர் :** (3)

1. தவ்வி, 2. சிலகம், 3. தெறுவி.

**பாடவேறுபாடு—விளக்கம்**

1—2 சிலகந் தவ்வி, 3. தருவி, தறுவி. (83)

### 1222. கண்ணாடியின் பெயர்

ஆடி, படிமக்கலம், தருப்பணம், கஞ்சனம்,
ஆதரி சனம், இவை **கண்ணாடி** யாகும்.

**கண்ணாடியின் பெயர் :** (5)

1. ஆடி, 2. படிமக்கலம், 3. தருப்பணம், 4. கஞ்சனம், 5. ஆதரிசனம்,



**பாடவேறுபாடு—விளக்கம்**

1 : 3—4 தற்பணங் கஞ்சனை

2 : 1—2 ஆதரி சனமாதி, ஆதரிசன முகுரங். (84)

### 1223. கண்டை என்னும் பெயர்

**கண்டை** யானைமணி, கைம்மணித் தொடர்பே.

**கண்டை என்னும் பெயர் :** (2)

1. யானைமணி, 2. கைம்மணித் தொடர்பானவை.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : ஆனை மணி முதல் மணியின் பெயர், யானை மணியின் பெயர், பெருமணியின் பெயர், மணியின் பெயர்.

4. தாம்புமணி. (85)

### 1224. கைம்மணியின் பெயர்

(பரந்த) வட்டிகை, **கைம்மணி,** படலிகை.

**கைம்மணியின் பெயர் :** (2)

1. வட்டிகை, 2. படலிகை.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : படலிகையின் பெயர்

1—2 பரந்த வட்டகை, பரந்த வட்டம். (86)

### 1225. சேகண்டியின் பெயர்

எறிமணி, **சேகண்டி** எனநவி லுவரே.

**சேகண்டியின் பெயர் :** (1)

எறிமணி.

**பாடவேறுபாடு—விளக்கம்**

3—4 என்றிசைத் தனரே

இந்நூற்பா சில பிரதிகளில் இல்லை.

இதன்பின்னர் முதற்பதிப்பாசிரியர் சேர்த்த எட்டு நூற் பாக்கள் வருமாறு :

**கலசப்பானையின் பெயர்**

90.★ கஞ்சனை கலசப் பானை யென்ப.

**படிக்கத்தின் பெயர்**

91.★ படியகம் படிக்கம்.

**நெய்த்துடுப்பின் பெயர்**

92.★ சுருக்கு சுருவ நெய்த்துடுப் பாகும்.

**தூபமுட்டியின் பெயர்**

93.★ தூபமுட்டி யிந்தளந் தடவெனச் சொல்ப.

**தாளத்தின் பெயர்**

94.★ கிட்டி பாண்டில் கஞ்சந் தாளம்.

**தூ பமணியின் பெயர்**

95.★ கைப்மணி தூ பமணி.

**பரணியின் பெயர்**

96.★ பீடிகை துமானங் காண்டங் கண்டிகை
கோடிகங் கடிப்பம் பூண்கொள் கலமே.

**பூண்கொள் கலத்தின் பெயர்**

97.★ கோயம் பரணி. (87)

## 1226. காளத்தின் பெயர்

காகளம், காளம்.

**காளத்தின் பெயர் :** (1)

காகளம். (88)

## 1227. சிறுசின்னத்தின் பெயர்

பீலி, சிறுசின்னம்.

**சிறுசின்னத்தின் பெயர் :** (1)

பீலி.



**பாடவேறுபாடு—விளக்கம்**

2 சிறுச்சின்னம்

காளத்துக்குஞ் சிறுசின்னத்துக்கும் பெயர் என்னும் தலைப்பில் 1226, 1227 ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பா வாகவும் கொள்வர். (89)

## 1228. குறிஞ்சிநிலப்பறையின் பெயர்

தொண்டகம். முருகியம், துடிஎன மூன்றும்,
வென்றிகொள் குறிஞ்சிப் பறைஏன விளம்புவர்.

**குறிஞ்சிநிலப்பறையின்பெயர் :** (3)

1. தொண்டகம், 2. முருகியம், 3. துடி.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : குறிஞ்சிப்பறையின் பெயர்.

3—4 பறையென லாகும். (90)

## 1229. பாலைநிலப்பறையின் பெயர்

துடியே, பாலை வேடர்தோற் பறையே.

**பாலைநிலப்பறையின் பெயர் :** (1)

துடி.

**பாடவேறுபாடு—விளக்கம்**

3—4 வேடர் தொல்பறை. (91)

## 1230. முல்லைநிலப்பறையின் பெயர்

முல்லை யாளர் ஏறங் கோட்பறை
சொல்லிய பம்பை யாகலு முரித்தே.

**முல்லைநிலப்பறையின் பெயர் :** (1)

பம்பை.

**பாடவேறுபாடு — விளக்கம்**

தலைப்பு : ஏறங் கோட்பறையின் பெயர், ஏறு கோட்பறையின் பெயர்.

1 : 3—4 சுறவு கோட்பறை. (92)

## 1231. மருதநிலப்பறையின் பெயர்

கிணையே, **மருதக் கிளர்பறை** ஆகும்.

**மருதநிலப்பறையின் பெயர் :** (1)

கிணை. (93)

## 1232. நெய்தனிலப் பறையின் பெயர்

சாபறை **நெய்தற்பறை.**

**நெய்தனிலப்பறையின் பெயர் :** (1)

சாபறை.

**பாடவேறுபாடு — விளக்கம்**

தலைப்பு : நெய்தற்பறையின் பெயர்

2 நெய்தற் பறையெனச் சாற்றுவர்.

இதனையடுத்து முதற்பதிப்பாசிரியர் சேர்த்த புது நூற்பா ஒன்று வருமாறு :

**உவகைப்பறையின் பெயர்**

98. ★ தூரிய முவகைப் பறையெனச் சொல்ப. (94)

## 1233. சிறுபறையின் பெயர்

ஆகுளி, **சிறுபறை,**

**சிறுபறையின் பெயர் :** (1)

ஆகுளி.

**பாடவேறுபாடு—விளக்கம்**

நெய்தற் பறைக்கும் சிறுபறைக்கும் பெயர் என்னும் தலைப்பில் 1232, 1233 ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் சிலர் கொள்வர். (95)



## 1234. ஒருகட்பறையின் பெயர்

**ஒருகட்பறை,** மொந்தை.

**ஒருகட்பறையின் பெயர் :** (1)

மொந்தை.

**பாடவேறுபாடு — விளக்கம்**

தலைப்பு : மொந்தையின் பெயர் (96)

## 1235. உடுக்கையின் பெயர்

தண்ணுமை, **உடுக்கை.**

**உடுக்கையின் பெயர் :** (1)

தண்ணுமை.

**பாடவேறுபாடு — விளக்கம்**

ஒருகற் பறைக்கும் உடுக்கைக்கும் பெயர் என்னும் தலைப்பில் 1134, 1135 ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் கொள்வர். (97)

## 1236. இடைசுறாங்கு சிறுபறையின் பெயர்

துடியே, **இடைசுறாங்கு வடிவில் சிறுபறை.**

**இடைசுறாங்கு சிறுபறையின் பெயர் :** (1)

துடி.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : துடியின் பெயர்.

1—2 துடியிடை சுருங்கு

இதனை அடுத்து முதற்பதிப்பாசிரியர் சேர்ந்த புதிய நூற்பா ஒன்று வருமாறு :

**மார்ச்சனையின் பெயர்**

99. ★ மண்ணே மார்ச்சனை. (98)

## 1237. பரந்தவாய்ப்பறையின் பெயர்

பதலை, **பரந்தவாய் பறை**எனப் பகர்வர்.

**பரந்தவாய்பறையின் பெயர் :** *(1)*

பதலை.

**பாடவேறுபாடு—விளக்கம்**

4 வறைவர் *(99)*

## 1238. முழவத்தின் பெயர்

**முழவம், குளிர்என மொழியவும் படுமே.**

**முழவத்தின் பெயர் :** *(1)*

குளிர்

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : மத்தளத்தின் பெயர்

இந்நூற்பாப் பரந்தவாய்ப் பறை பற்றிய முந்திய நூற்பாவின் இரண்டாம் அடியாகச் சில பிரதிகளில் காணப்படுகிறது. *(100)*

## 1239. குடமுழவின் பெயர்

**மண்கணை, முழவர், குடமுழவின் பெயரே.**

**குடமுழவின் பெயர் :** *(2)*

1. மண்கணை, 2. முழவம்

**பாடவேறுபாடு—விளக்கம்**

குடமுழவின் பெயர் முழவு மாகும்.

இதனை அடுத்து முதற்பதிப்பாசிரியர் சேர்ந்த புதிய நூற்பா இரண்டு வருமாறு :

**கடிப்பின் பெயர்.**

100. ★ குணில்கடிப் பாகும்.

**திமிலையின் பெயர்**

101. ★ சல்லரி திமிலை *(101)*

## 1240. பேரிகைத்தொகுதியின் பெயர்

**சகண்டை, முழவம், பனையே, சகடம்,**
**துந்துமி, பேரிகைத் தொகுப்பெயர் ஆகும்.**



**பேரிகைத் தொகுதியின் பெயர் :** *(5)*

1. சகண்டை, 2. முழவம், 3. பணை, 4. சகடம், 5. துந்துமி.

**பாடவேறுபாடு—விளக்கம்**

2 : 2 துந்துமி

இந்நூற்பா மூவேறு தலைப்பில் மூன்று நூற்பாவாகவும் சில பிரதிகள் காணப்படுகின்றன.

**முரசின் பெயர்**

சகண்டை முரசம்.

**சகண்டையின் பெயர்**

பணையே சகடை.

**பேரிகையின் பெயர்**

துந்துமி பேரிகைத் தொகுபெய ராகும்.

இதனை அடுத்து முதற்பதிப்பாசிரியர் சேர்த்த நான்கு புதிய நூற்பாக்கள் வருமாறு :

**நிசாளத்தின் பெயர்**

102. ★ தண்ணுமை நிசாளம்.

**பன்றிப்பறையின் பெயர்**

103. ★ குடம்பறை பன்றிப் பறையெனக் கருதுவர்.

**கரடிப்பறையின் பெயர்**

104. ★ தட்டை சரடிப் பறையெனக் கூறுப.

**இடக்கையின் பெயர்**

105. ★ இடக்கை யாமந் திரிகை யெய்தும். *(102)*

## 1241. படகத்தின் பெயர்

**பணவம், திண்டமம், ஆனகம், படகம்.**

**படகத்தின் பெயர் :** *(3)*

1. பணவம், 2. திண்டமம், 3. ஆனகம்,

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : திண்டிமத்தின் பெயர்

இந்நூற்பாவை இருவேறு தலைப்புக்களில் இருநூற்பா வாகவும் சில பிரதிகள் தருகின்றன.

**திண்டிமத்தின் பெயர்**

பணவம் திண்டிமம்.

**படகத்தின் பெயர்**

ஆனகம் படகம். (103)

## 1242. பல்வகைப்பறையின் பெயர்

சல்லரி, பம்பை, தடாரி, தக்கை,

பல்வகைப் பறையின் பெயர்ப்பால ஆகும்.

**பல்வகைப்பறையின் பெயர் :** (4)

1. சல்லரி, 2. பம்பை, 3. தடாரி, 4. தக்கை.

**பாடவேறுபாடு—விளக்கம்**

முந்திய நூற்பாவை இந்நூற்பாவின் முதலடியாக அமைத் தும் சில பிரதிகள் காணப்படுகின்றன. (104)

## 1243. வாச்சியப் பொதுப் பெயர்

முரசு, தாளம், பீலி, முருடு, (பொரு) கோடணை,

முழவு, தூரியம், பணை, இயப் பொதுப்பெயர்.

**வாச்சியப் பொதுப் பெயர் :** (8)

1. முருசு, 2. தாளம், 3. பீலி, 4. முருடு, 5. கோடணை, 6. முழவு, 7. தூரியம், 8. பணை.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : பறையின் பொதுப் பெயர்.

முழவு தூரியம் பறையின் பொதுப்பெயர். (105)

## 1244. கொம்பின் பெயர்

வயிரே, இரலை, ஆம்பல், கோடென்று

இனைய நான்கும் கொம்புஎன இசைப்பர்.



**கொம்பின் பெயர் :** (4)

1. வயிர், 2. இரலை, 3. ஆம்பல், 4. கோடு.

**பாடவேறுபாடு—விளக்கம்**

4 கோலென். (106)

## 1245. யாழின் பெயர்

தந்திரி, வீணை, கின்னரம், விபஞ்சிதம்,

கருவி, கோடவதி, அறுசரம், வல்லரிஎன

வருபவை ஓசையோடு யாழின் பெயரே.

**யாழின் பெயர் :** (8)

1. தந்திரி, 2. வீணை, 3. கின்னரம், 4. விபஞ்சிதம், 5. கருவி, 6. கோடவதி, 7. அறுசரம், 8. வல்லரி.

**பாடவேறுபாடு—விளக்கம்**

1 : 4 விபஞ்சி

2 கருவி சகோடங் கலம்வல் லரியென

2 : 1—2 நாதங்கருவி கோட பதி, 3. யறுகலம், 4. வல்லசி.

இந்நூற்பாவைத் தொடர்ந்து பின்வருமாறு ஒருசில பிரதி யில் பாட வேறுபாட்டுடன் காணப்படுகிறது.

வீணை கின்னரந் தண்டு மாகும்.

கோடவதி கருவி யாழ்ப்பெய ராகும்.

அறுகலமும் விபஞ்சியு மதன்பெய ராகும். (107)

## 1246. யாழ்முறுக்காணியின் பெயர்

மாடகம், முறுக்காணி.

**யாழ்முறுக்காணியின் பெயர் :** (1)

மாடகம். (108)

## 1247. யாழ்வலிக்கட்டின் பெயர்

திவவு, யாழ் வலிக்கட்டு.

யாழ்வலிக்கட்டின் பெயர் : (1)
திவவு.

பாடவேறுபாடு—விளக்கம்
2 வலிக்கட்டே.

யாழ் முறுக்காணிக்கும் யாழ்வலிக்கட்டுக்கும் பெயர் என்னும் தலைப்பில் 1246, 1247 ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் கொள்வர். (109)

## 1248. யாழ் நரம்பின் பெயர்

கோலே, தந்திரி, குரல், யாழ் நரம்பே.

யாழ்நரம்பின் பெயர் : (3)
1. கோல், 2. தந்திரி, 3. குரல்.

பாடவேறுபாடு விளக்கம்
தலைப்பு : யாழ்க்கட்டு நரம்பின் பெயர்.
கோடே தந்திரி குரல்யா னரம்பே.

இந்நூற்பாவை இருவேறு தலைப்புக்களில் இரு நூற்பாவாகவும் ஒரு பிரதி தருகிறது.

யாழ்க்கோலின் பெயர்
கோலே தந்திரி.

யாழ்நரம்பின் பெயர்
குரல்யாழ் நரம்பே. (110)

## 1249. ஆதியாழாவது

ஆயிரம் நரம்பிற்று, ஆதியாழ் ஆகும்.

ஆதியாழாவது : (1)
ஆயிரம் நரம்பிற்று.

பாடவேறுபாடு—விளக்கம்
தலைப்பு : ஆதியாழின் பெயர். (111)



## 1250. தேரின் பெயர்

கவரி, எந்திரம், திகிரி, சயந்தனம்,
இரதம், வையம், கொமஞ்சி, கூவிரி, தேர்.

தேரின் பெயர் : (8)
1. கவரி, 2. எந்திரம், 3. திகிரி, 4. சயந்தனம், 5. இரதம், 6. வையம், 7. கொடிஞ்சி, 8. கூவிரி.

பாடவேறுபாடு—விளக்கம்
1 : 2 யியந்திரம்
2 : 4 கூவிரம்தேர். (112)

## 1251. தேர்க்காலின் பெயர்

உருளி, நேமி, பருதி, உந்தி,
திகிரி, ஆழி, சில்லி, தேர்க்கால்.

தேர்க்காலின் பெயர் : (7)
1. உருளி, 2. நேமி, 3. பருதி, 4. உந்தி, 5. திகிரி, 6. ஆழி, 7. சில்லி.

பாடவேறுபாடு—விளக்கம்
தலைப்பு : தேர்ச்சக்கரத்தின் பெயர், தேர்வண்டிலின் பெயர், வண்டிலின் பெயர்.
1 : 1 உருளை 3 பரிதி. (113)

## 1252. தேருருளின் அகத்தில் செறிகதிரின் பெயர்

ஆரே, உருளி யகத்தில் செறிகதிர்.

தேருருளில் அகத்தில் செறிகதிரின் பெயர் : (1)
ஆர்.

பாடவேறுபாடு—விளக்கம்
தலைப்பு : அச்சுநுனித்திரளின் பெயர், அஞ்சுரு வாணியின் பெயர், உருளினகத்திற் செறிகதிரின் பெயர், தேனிகத்திற் செறிகதிரில் பெயர், வண்டிற் செறிகதிரின் பெயர், வண்டியகவாயின் பெயர்.

2—3 யுருளி னகத்திற்

இதனை அடுத்து முதற்பதிப்பாசிரியர் இணைத்த புதிய நூற்பா ஒன்று வருமாறு :

**தேர்நடுவின் பெயர்**

106. ★ நாப்பணுந் தட்டுந் தேர்நடு வாகும். (114)

## 1253. தேர்மொட்டின் பெயர்

கூவிரம், கொடிஞ்சி, கூம்பு, **தேர் மொட்டே.**

**தேர்மொட்டின் பெயர் :** (3)

1. கூவிரம், 2. கொடிஞ்சி, 3. கூம்பு.

**பாடவேறுபாடு— விளக்கம்**

அச்சுப்பிரதியில் இந்நூற்பா இருவேறு தலைப்புக்களில் இருநூற்பாவாகத் தரப்பட்டுள்ளது.

**தேர்க்கொடிஞ்சியின் பெயர்**

கூவிரங் கொடிஞ்சி.

**தேர்மொட்டின் பெயர்**

கூம்புதேர் மொட்டே. (115)

## 1254. பாண்டில் பூண்ட ஊர்தியின் பெயர்

சிவிகை, பாண்டில் பூண்ட ஊர்தி,
சகடம், வையம் எனப்பெயர் சாரும்.

**பாண்டில் பூண்ட ஊர்தியின் பெயர் :** (3)

1. சிவிகை, 2. சகடம், 3. வையம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : எருது பூட்டிய ர்தியின் பெயர், சகடம், வையம் என்னும் பெயர்.

2 : 4 சாலும், சாற்றும், ஆகும்.

இதனை அடுத்து முதற்பதிப்பாசிரியர் சேர்ந்த புதிய நூற்பா ஒன்று வருமாறு.



**பரிபூண்டிற்கு மூர்த்தியின் பெயர்**

107. ★ பாண்டில் கஞ்சிகை வையமென்பன
பரிபூண் டீர்க்கு மூர்திப் பால. (116)

## 1255. பண்டியின் பெயர்

வையம், உருள், ஒழுகை, சாகாடு, சகடம்,
(எய்திய) சாடு, **பண்டி** என்று இசைப்பர்.

**பண்டியின் பெயர் :** (5)

1. வையம், 2. உருள், 3. சாகாடு, 4. சகடம், 5. சாடு.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : சகடத்தின் பெயர், வண்டிலின் பெயர்.

1 : 2 முருளொழுகு

2 : 2 சகடு

இதன்பின் முதற்பதிப்பாசிரியர் இணைத்த புதுநூற்பா ஒன்று வருமாறு :

**பண்டியுளிரும்பின் பெயர்**

108. ★ இருசுங் கந்தும் பண்டியு விரும்பாம். (117)

## 1256. தேர்மேலிடு பரப்பின் பெயர்

பலகைப் பாவே, தட்டுப் பாஎன
இலகு **தேரின் மேலிடுபரப்பே.**

**தேரின் மேலிடு பரப்பின் பெயர் :** (2)

1. பலகைப்பா, 2. தட்டுப்பா.

**பாடவேறுபாடு—விளக்கம்** (118)

1 : 3—4 தகட்டுப் பாரென

## 1257. தேர்மேல் மரச்சுற்றின் பெயர்

கிடுகே, **தேர்மேல் புடைசூழ் மரச்சுற்று.**

**தேர்மேல் மரச்சுற்றின் பெயர் :** (1)

கிடுகு.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : தேர்மேற் சுற்றுப்பலகையின் பெயர், கிடு கென்னும் பெயர்.

1 கிடுகு. (119)

## 1258. கலப்பையின் பெயர்

நாஞ்சில், அலம், படை, கலனை என்ன
ஆய்ந்த நான்கும் **கலப்பை** ஆகும்.

**கலப்பையின் பெயர் :** (4)

1. நாஞ்சில், 2. அலம், 3. படை, 4. கலனை.

**பாடவேறுபாடு—விளக்கம்**

2 ஆய்ந்த ந ன்கொடு மேழியுங் கலப்பை. (120)

## 1259. ஒன்றற்கமைந்த பலவுறுப்பின் பெயர்

கலப்பையும் கலனையும் என்ன வருபவை
உரைக்கில் **ஒன்றைக்கு அமைந்தபல் உறுப்பே.**

**ஒன்றைக்கமைந்த பலவுறுப்பின் பெயர் :** (2)

1. கலப்பை, 2. கலனை.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : கலப்பைப் பல்வகை யுறுப்பின் பெயர்.

2 : 2—3 ஒன்றிற் கமைந்த, ஒன்றுக் கமைந்த.

இந்நூற்பா முந்திய நூற்பாவுடன் (1258) தொடர்ந்து ஒன்றாகவும் சில பிரதிகளில் உள்ளது.

இதனை அடுத்து முதற்பதிப்பாசிரியர் சேர்த்த புதிய நூற்பா ஒன்று வருமாறு :

**கொழுவின் பெயர்**

109. ★ கோளே கொழுவாம். (121)



## 1260. தூணின் பெயர்

கந்து, எழு, வெளிலே, ஆளானம், தறி,
கம்பம், மதலை, பற்று, **தூணே.**

**தூணின் பெயர் :** (8)

1. கந்து, 2. எழு, 3. வெளில், 4. ஆளானம், 5. தறி, 6. கம்பம், 7. மதலை, 8. பற்று.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : கட்டுத்தறியின் பெயர்

கம்பந் தம்ப மதலைபற் றுத்தூண். (122)

## 1261. யானைத்தறியின் பெயர்

ஆளானம், வெளிலே, யானை **அணைதறி.**

**யானைத்தறியின் பெயர் :** (2)

1. ஆளானம், 2. வெளில்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : ஆனைத்தறியின் பெயர், யானைத்தூணின் பெயர், ஆனையணைதறியின் பெயர்.

வெளிலே யானை யணைதறி—என்பது ஒரு பிரதிப் பாடம். (123)

## 1262. குறுந்தறியின் பெயர்

போதிகை, **குறுந்தறி.**

**குறுந்தறியின் பெயர்** (1)

போதிகை. (124)

## 1263. வேள்வித்தறியின் பெயர்

யூபம், **வேள்வித்தறி.**

**வேள்வித்தறியின் பெயர் :** (1)

யூபம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

**தலைப்பு :** வேள்வித்தூணின் பெயர்.

2 வேழ்வித்தறி.

குறுந்தறிக்கும் வேள்வித்தறிக்கும் பெயர் என்னும் தலைப்பில் 1262, 1263 ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் கொள்வர். (125)

## 1264. கணையமரத்தின் பெயர்

எழுவே, **கணையமரம்.**

**கணையமரத்தின் பெயர் :** (1)

எழு.

**பாடவேறுபாடு—விளக்கம்**

2 கணையாம். (126)

## 1265. தொழுமரத்தின் பெயர்

தொழுவே **தொழுமரம்.**

**தொழுமரத்தின் பெயர் :** (1)

தொழு.

**பாடவேறுபாடு—விளக்கம்**

**தலைப்பு :** தொழாமரத்தின் பெயர், தொழுவின் பெயர், தொழுவுழலைக்குப் பெயர்.

2 தொழாமரம், தொழுகு, தோழம்.

கணையமரத்துக்கும் தொழுவுழலைக்கும் பெயர் என்னும் தலைப்பில் 1264, 1265 ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் கொள்வர். (127)

## 1266. கதவின் பெயர்

கவாடமும் புதவும் வாரியும் **கதவே.**



**கதவின் பெயர் :** (3)

1. கவாடம், 2. புதவு, 3. வாரி.

**பாடவேறுபாடு—விளக்கம்** (128)

1 கபாடமும்.

## 1267. கதவிற்செறி தாளின் பெயர்

சீப்பே, **கதவிற் செறிதாள்** ஆகும்.

**கதவிற்செறி தாளின் பெயர் :** (1)

சீப்பு.

**பாடவேறுபாடு—விளக்கம்**

**தலைப்பு :** தாளின் பெயர், கதவிற்செறி தாழின் பெயர், கதவிடு தாளின் பெயர்.

சீப்புக்காழ் கதவிற் செறிதா ழாகும்—அச்சுப்பிரதி.

இந்நூற்பாவை அடுத்து முதற்பதிப்பாசிரியர் இணைத்த மூன்று புதிய நூற்பாக்கள் வருமாறு :

**யானைத்தோட்டியின் பெயர்**

110. ★ அங்குசங் கோணம் யானைத் தோட்டி.

**சுட்டுக்கோலின் பெயர்**

111. ★ சுட்டுக்கோ லுலையாணிக் கோலெனச் சொல்ப

சுட்டுக் கோலுலை யாணிக் கோலே—
பிற்பதிப்புக்கள்.

**சம்மட்டியின் பெயர்**

112. ★ கூடஞ் சம்மட்டி. (129)

## 1268. உரலின் பெயர்

உலூகலம், கறைஇவை இரண்டும் **உரலே.**

**உரலின் பெயர் :** (2)

1. உலூகலம், 2. கறை.

**பாடவேறுபாடு—விளக்கம்**

1 உலூகம், உலகலம்.

இதன்பின் அச்சுப்பிரதியில் காணும் இரு நூற்பாக்கள் பெரும்பான்மைப் பிரதிகளிலும் இல்லை.

**உலக்கையின் பெயர்**

முசலமுந் தடியு முலக்கை யாகும்.

**அஞ்சனக்கோலின் பெயர்**

கோலஞ் சனக்கோல்.

இதனை அடுத்து முதற்பதிப்பாசிரியர் பாடி இணைத்த ஐந்து நூற்பாக்கள் வருமாறு :

**எழுதுகோலின் பெயர்**

113. ★ துகிலிகை யெழுதுகோல்.

**ஊசியின் பெயர்**

114. ★ ஊசி சூசி.

**ஊசித்துளையின் பெயர்**

115. ★ பாச மூசித்துளை.

**ஓலைதீட்டும் படையின் பெயர்**

116. ★ ஊசி கண்ட மாணி யோலைதீட் டும்படை.

**சங்கிலியின் பெயர்**

117. ★ சங்கிலி தொடர்துவக் கிடங்கணி சாலும். (130)

## 1269. ஊஞ்சலின் பெயர்

ஊசல், ஊஞ்சல் ஆமென உரைப்பர்.

**ஊஞ்சலின் பெயர் : (1)**

ஊசல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : ஊசலின் பெயர்.

ஊச லுஞ்ச லூச லாகும்.

ஊசல் விண்டாண் டூஞ்ச லாகும்—அச்சுப்பிரதி. (131)



## 1270. உறியின் பெயர்

சிமிலி, சிக்கம், சிதர், மூன்றும் உறியே.

**உறியின் பெயர் : (3)**

1. சிமிலி, 2. சிக்கம், 3. சிதர்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

3 சிகரமூன்று.

இது ஊசலின் பெயருக்கு முன்னர் அச்சுப்பிரதிகளில் காணப்படுகிறது. (132)

## 1271. கட்டிலின் பெயர்

மஞ்சமும், பாரியும், பரியங்கமும், அரியும்,
இங்குஇவை கட்டில் எனமொழிந் தனரே.

**கட்டிலின் பெயர் : (4)**

1. மஞ்சம், 2. பாரி, 3. பரியங்கம், 4. அரி.

**பாடவேறுபாடு—விளக்கம்**

1 மஞ்சம் பாரி யரிபரி யங்கம். — அச்சுப்பிரதி.

2 : 3—4 லெனவிளம் பினரே

மஞ்சமும் பாரியும் பரியங்கமும் கட்டில்—என்பது ஒரு பிரதிப் பாடம்.

இதன் பின்னர் முதற் பதிப்பாசிரியர் சேர்த்த நூற்பாக்கள் 11 வருமாறு :

**விசியின் பெயர்**

118. ★ விசி யரி யாகும்.

**தவத்தோர் பீடத்தின் பெயர்**

119. ★ விட்டரம் பீடிகை தவத்தோர் பீடம்.

**சிங்காதனத்தின் பெயர்**

120. ★ பத்திரா சனஞ்சிங் காதனம் பகரும்.

அளவைக்காலின் பெயர்

121. ★ குளக மம்பணந் தூம்பு கச்ச
மளவைக் காலென் றறையல் வேண்டும்.

நாழியின் பெயர்

122. ★ குஞ்ச நாழி.

கொத்தளிப்பாயின் பெயர்

123. ★ ஆரை கொத்தளிப்பாய்.

புற்பாயின் பெயர்

124. ★ சாப்பை புற்பாய்.

பிரப்பம்பாயின் பெயர்

125. ★ சாதிப்பாய் பிரப்பம் பாயெனச் சாற்றுவர்.

தோற்பாயின் பெயர்

126. ★ சருமந் தோற்பாய்.

தடுக்கின் பெயர்

127. ★ தவிசு தடுக்கே.

குழாயின் பெயர்

128. ★ தண்டு குழாய்.

இதனை அடுத்து மூன்று நூற்பாக்கள் அச்சுப்பிரதியில் காணப்படுகின்றன. இவையும் பழம் பிரதிகளில் இல்லை.

பூந்தட்டின் பெயர்

பூந்தட்டுக் கோடிகம்.

பூப்பெட்டியின் பெயர்

பூப்பெட்டி மூழிவாய்.

கிடுகின் பெயர்

சட்டங் கிடுகே.

இதனை அடுத்து முதற் பதிப்பாசிரியர் இணைத்த புதிய நூற்பாக்கள் 10 வருமாறு :



விளக்குத் தண்டின் பெயர்

129. ★ தம்பங் கௌசிக மத்திகை விளக்குத்
தண்டின் பெயரெனச் சாற்றப் பெறுமே.

முறத்தின் பெயர்

130. ★ சின்னந் தட்டுச் சேட்டை முற்றில்
முன்னிய முறமென மொழியற் பால.

புட்டிலின் பெயர்

131. ★ புட்டி விறைவை.

கூடையின் பெயர்

132. ★ கூடை வட்டிகை.

சுள்கின் பெயர்

133. ★ சுளகே சூர்ப்பம்.

துடைப்பத்தின் பெயர்

134. ★ சோதினி மாறு துடைப்ப மாகும்.

மூழையின் பெயர்

135. ★ மூழை மூழி.

மத்தின் பெயர்

136. ★ மத்து மத்தம்.

தயிர்கடை தறியின் பெயர்

137. ★ வெளிறயிர் கடைதறி.

பாவாற்றியின் பெயர்

138. ★ பாவாற்றி குச்சு.

இதனை அடுத்து அச்சுப்பிரதியில் காணும் நூற்பாவும் பழம்பிரதிகளில் இல்லை.

நூணாழியின் பெயர்

நூணாழி நாடா.

இதன் பின்னர் அச்சுப்பிரதியில் காணும் மூன்று நூற்பாக்களும் முதற்பதிப்பாசிரியர் பாடிச் சேர்த்தனவே.

**காராம்பியின் பெயர்**

*139. ★ காராம்பி பூட்டை இழாரம்பி காம்பி.*

**இறைகூடையின் பெயர்**

*140. ★ இறைகூடை பிழா ரிடாரா கும்மே.*

**நீர்ப்பத்தரின் பெயர்**

*141. ★ நீர்ப்பத்தர்க் கம்பணந் தூம்பு நேம்ப.* (133)

## 1272. பரணின் பெயர்

பணவை, இதணம், கழுது, **பரணே.**

**பரணின் பெயர் :** (3)

1. பணவை, 2. இதணம், 3. கழுது. (134)

## 1273. ஏணியின் பெயர்

இறைவை கடவை.

**ஏணியின் பெயர் :** (2)

1. இறைவை, 2. கடவை.

**பாடவேறுபாடு—விளக்கம்**

இறைவை கடவை யேணியென் றாகும்.

ஏணி கடவை யிறைவை சேணி—அச்சுப்பிரதி. (135)

## 1274. கண்ணேணியின் பெயர்

மால்பு, **கண்ணேணி.**

**கண்ணேணியின் பெயர் :** (1)

மால்பு.

**பாடவேறுபாடு—விளக்கம்**

மால்புகண் ணேணி யெனவகுத் தனரே—அச்சுப்பிரதி.

ஏணிக்கும் கண்ணேணிக்கும் பெயர் என்னும் தலைப்பில் 1273, 1274 ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் கொள்வர். (136)



## 1275. கிளிகடி கருவியின் பெயர்

குளிரும், தழலும், தட்டையும் மூன்றும்
**கிளிகடி கருவி** எனக்கிளத் தினரே.

**கிளிகடி கருவியின் பெயர் :** (3)

1. குளிர், 2. தழல், 3. தட்டை.

**பாடவேறுபாடு - விளக்கம்**

2 : 3—4 யாமெனக் கிளப்பர். (137)

## 1276. குறுந்தடியின் பெயர்

குனிலே, **குறுந்தடி.**

**குறுந்தடியின் பெயர் :** (1)

குனில்.

**பாடவேறுபாடு - விளக்கம்**

குனிலே குறுந்தடி யாகக் கூறுவர்—என்று ஒரு பிரதி. (138)

## 1277. நெய்த்துடுப்பின் பெயர்

துடுவை, **நெய்த்துடுப்பே.**

**நெய்த்துடுப்பின் பெயர் :** (1)

துடுவை.

**பாடவேறுபாடு—விளக்கம்**

1 சுருவம்

குறுந்தடிக்கும் நெய்த்துடுப்புக்கும் பெயர் என்னும் தலைப்பில் 1276, 1277 ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் கொள்வர். (139)

## 1278. அடைகுறட்டின் பெயர்

பட்டடை, **அடைகுறடு.**

**அடைகுறட்டின் பெயர் :** (1)

பட்டடை. (140)

## 1279. பருங்குறட்டின் பெயர்

முருடு, **பருங்குறடே.**

**பருங்குறட்டின் பெயர் :** (1)

முருடு.

**பாடவேறுபாடு—விளக்கம்**

2 பெருங்குறடு.

அடைகுறட்டுக்கும் பருங்குறட்டுக்கும் பெயர் என்னும் தலைப்பில் 1298, 1299 ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் சிலர் கொள்வர். (141)

## 1280. மரக்கலத்தின் பெயர்

வங்கம், பாதை, தோணி, யானம்,
(தங்கு) மதலை, திமில், பாறு, அம்பி,
பஃறி, சதாவே, பாரதி, தவ்வே,
போதகம், தொள்ளே, நாவாய் என்று இவை
மேதகு நீர்மேல் ஒடு **மரக்கலம்.**

**மரக்கலத்தின் பெயர்** (15)

1. வங்கம், 2. பாதை, 3. தோணி, 4. யானம், 5. மதலை, 6. திமில், 7. பாறு, 8. அம்பி, 9. பஃறி, 10. சதா, 11. பாரதி, 12. தவ்வு, 13. போதகம், 14. தொள், 15. நாவாய்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

4 : 1-2 போதந் தொள்ளை. (142)

## 1281. மரக்கலப்பாயின் பெயர்

இதையே **மரக்கலப்பாய்** என இசைப்பர்.

**மரக்கலப்பாயின் பெயர் :** (1)

இதை.



**பாடவேறுபாடு – விளக்கம்**

இதனை அடுத்து ஒருசில பிரதிகளில் காணப்படும் நூற்பா ஒன்று வருமாறு :

**பாய்மரத்தின் பெயர்**

கூம்பு பாய்மர மெனக் கூறுவர்.

இந்நூற்பாப் பழம் பிரதிகளில் இல்லை. (143)

## 1282. தோணியின் பெயர்

பகடு பஃறி யம்பி யோடந்
திமிலே, **தோணி** எனச் செப்பினரே.

**தோணியின் பெயர் :** (5)

1. பகடு, 2. பஃறி, 3. அம்பி, 4. ஓடம், 5. திமில். (144)

## 1283. தெப்பத்தின் பெயர்

பகடு, பட்டிகை, யானம், அம்பி,
படுவை, தொள்ளம், புணை, மிதவை, **தெப்பம்.**

**தெப்பத்தின் பெயர் :** (8)

1. பகடு, 2. பட்டிகை, 3. யானம், 4. அம்பி 5. படுவை, 6. தொள்ளம், 7. புணை, 8. மிதவை.

**பாடவேறுபாடு—விளக்கம்**

1 ; 3 யாதனம் (145)

## 1284. பேழையின் பெயர்

மஞ்சிகம், மஞ்சிகை, **பேழை** என அறைவர்.

**பேழையின் பெயர் :** (2)

1. மஞ்சிகம், 2. மஞ்சிகை

**பாடவேறுபாடு – விளக்கம்**

1. மஞ்சி, மஞ்சு, மஞ்சுகம், 4. வைப்பர், என்ப. (146)

## 1285. கமண்டலத்தின் பெயர்

காண்டகம், குண்டிகை, கரகம், **கமண்டலம்.**

**கமண்டலத்தின் பெயர் :** (3)

1. காண்டகம், 2. குண்டிகை, 3. கரகம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

1. கரண்டகம், கரண்டம், கரண்டிகை

இதனைப் பேழையின் பெயருக்கு முன்னர் வைத்தும் சில பிரதிகள் உள. (147)

## 1286. கெண்டியின் பெயர்

காண்டகம், குண்டிகை, கடிப்பதம், **கெண்டி.**

**கெண்டியின் பெயர்** (3)

1. காண்டம், 2. குண்டிகை, 3. கடிப்பதம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

1. கரண்டகம், காண்டம், 3. கடிப்பம், 4. கெண்டிகை,
காண்டங் கரகங் கமண்டலங் குண்டிகை
கடிப்ட கெண்டிகை யாமெனக் கருதுவர்
—அச்சுப்பிரதி. (148)

## 1287. பீடிகையின் பெயர்

பீடிகை, துமானம் எனப்பெயர் பெறுமே.

**பீடிகையின் பெயர் :** (1)
துமானம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : பீடிகை அல்லது பூண் கொள்கலத்தின் பெயர். (149)

## 1288. கொள்கலம் என்னும் பெயர்

மாலையும் சாந்தும் மடியும் பெய்த
கோல விகற்பம் **கொள்கலம்** ஆகும்.

**கொள்கலம் என்னும் பெயர் :**

மாலையும் சாந்தும் மடியும் பெய்து வைப்பது.



**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : கொள்கலம் என்பது, அணிகொள்கலத்தின் பெயர்.

1287, 1288 ஆம் நூற்பாக்கள், பீடிகை துமானம் என்னும் பெயர் அல்லது மாலை சாந்து மடிசள் வைக்கும் பெட்டியின் பெயர் என்னும் தலைப்பின் கீழ்,

பீடிகை துமான மெனப்பெயர் பெறுவன
மாலையுஞ் சாந்து மடியும் பெய்த
கோல விகற்பக் கொள்கல மாகும்

என ஒரே நூற்பாவாகவும் சில பிரதிகளில் உள்ளன. (150)

## 1289. பிழா என்னும் பெயர்

பகுவாய்க் கொள்கலம், **பிழா** எனப்படுமே.

**பிழா என்னும் பெயர் :** (1)

பகுவாய்க் கொள்கலம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : பிளாவின் பெயர், பிளவின் பெயர், பகுவாய்க் கொள்கலத்தின் பெயர். (151)

## 1290. ஓலைக்குடையின் பெயர்

**குடை,** ஓலை ஆகும்.

**ஓலைக்குடையின் பெயர் :** (1)

ஓலை.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : குடையின் பெயர்.
குடையோலை யேனம். (152)

## 1291. பொதியின் பெயர்

**பொதி,** மூடை என்ப.

**பொதியின் பெயர் : (1)**

மூடை

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : சுமையின் பெயர்.

ஓலைக்குடைக்கும் பொதிக்கும் பெயர் என்னும் தலைப்பில் 1290, 1291 ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் கொள்வர்.

ஓலைக்குடையின் பெயர் என்னும் தலைப்பில்

குடையோலை யேனம் பொதிமூடை யென்ப—

என அச்சுப்பிரதி அமைந்துள்ளது. (153)

## 1292. பொற்கொல்லன் சின்னத்தட்டின் பெயர்

கன்னம் **பொற்கொல்லன் சின்னத் தட்டே.**

**பொற்கொல்லன் சின்னத் தட்டின் பெயர் : (1)**

கன்னம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : தட்டான் சிறுதட்டின் பெயர், தட்டத்தின் பெயர், கன்ன மென்னும் பெயர். (154)

## 1293. மயிற்பீலிக்குடையின் பெயர்

கலாபம், தழையே, தொங்கல் என்று இவை
**கலாபப் பீலியிற் கட்டிய கவிகை.**

**மயிற்பீலிக்குடையின் பெயர் : (3)**

1. கலாபம், 2. தழை, 3. தொங்கல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : பீலிக்குடையின் பெயர். (155)

## 1294. வெண்குடையின் பெயர்

தொங்கல், கவிகை, சத்திரம், பிச்சம்,
இங்கு இவை **வெண்குடைப்** பெயர ஆகும்.



**வெண்குடையின் பெயர் : (4)**

1. தொங்கல், 2. கவிகை, 3. சத்திரம், 4. பிச்சம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

2 : 3—4 பெயரென விசைப்பர். (156)

## 1295. சிற்றாலவட்டத்தின் பெயர்

பீலி, **சிற்றாலவட்டப் பெயரே.**

**சிற்றால வட்டத்தின் பெயர் : (1)**

பீலி.

**பாடவேறுபாடு—விளக்கம்**

பீலி சிற்றால வட்டம்

'பீலி சாந்தாற்றி சிற்றால வட்டம்'— அச்சுப்பிரதி. (157)

## 1296. கால்செய்வட்டத்தின் பெயர்

சாந்தாற்றி, **கால்செய் வட்டம்** ஆகும்.

**கால்செய் வட்டத்தின் பெயர் : (1)**

சாந்தாற்றி.

**பாடவேறுபாடு—விளக்கம்**

சிற்றாலவட்டத்துக்கும் கால்செய்வட்டத்துக்கும் பெயர் என்னும் தலைப்பில் 1295, 1296 ஆம் நூற்பாக்கள் ஒருங்கிணைய,

'பீலிசிற் றாலவட்டம் சாந்தாற்றி கால்செய்வட்டம்' என்று பாடங் கொள்வர் சிலர்.

அச்சுப்பிரதியின் தலைப்பும் பாடமும் பின்வருமாறுள்ளன:

**கால்செய்வட்டம்** அல்லது **பேராலவட்டத்தின்** பெயர்

விசிறி வீசனஞ் சாந்தாற்றி யென்றிவை
வகுத்த கால்செய் வட்ட மாகும். (158)

## 1297. ஆலவட்டத்தின் பெயர்

உக்கம், விசிறி, **ஆலவட்டம்மே.**

**ஆலவட்டத்தின் பெயர் :** (2)

1. உக்கம், 2. விசிறி. (159)

### 1298. சீப்பின் பெயர்

**சிக்கம், மயிர்**வாரி, **சீப்பு** என்று ஆகும்.

**சீப்பின் பெயர் :** (2)

1. சிக்கம், 2. மயிர்வாரி.

**பாடவேறுபாடு—விளக்கம்**

2—3 மயிர்வார் சீப் பெனச்

3—4 சீப்பெனச் செப்புவர், சீப்பெனப் படுமே.

இதனை அடுத்து முதற்பதிப்பாசிரியர் சேர்த்த புதிய நூற்பா ஒன்று வருமாறு :

**மகளிராடுங்கலத்தின் பெயர்**

142. ★ ஓரை **மகளி ராடு**ங் களமாம்.

3—4 ஆடுங் களமாம்—பிற்பதிப்புக்கள். (160)

### 1299. சூதாடு கருவியின் பெயர்

காசும், வல்லும், **சூதாடு கருவி.**

**சூதாடு கருவியின் பெயர் :** (2)

1. காசு, 2. வல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

இதனை அடுத்து முதற்பதிப்பாசிரியர் சேர்த்த இரு நூற்பாக்கள் வருமாறு :

**கவற்றிற்றாயத்தின் பெயர்**

143. ★ ஆய்ங் **கவற்றிற்** றாய பாகும்.

**சாரியின் பெயர்**

144. ★ சாரி நாயாம். (161)

### 1300. பந்தின் பெயர்

**கந்துகக் கிளவி** பந்தெனப் படுமே.



**பந்தின் பெயர் :** (1)

கந்துகம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

3—4 பந்தெனக் கருதுவர். (162)

### 1301. சும்மாட்டின் பெயர்

சும்மு, சுமையடை, **சும்மாடு** ஆகும்.

**சும்மாட்டின் பெயர் :** (2)

1. சுமடு, 2. சுமையடை. (163)

### 1302. கண்டத்தின் பெயர்

கடிகை, துண்டம், **கண்டம்** ஆகும்.

**கண்டத்தின் பெயர் :** (2)

1. கடிகை, 2. துண்டம். (164)

### 1303. நூலின் பெயர்

பனுவலும், தந்துவும், **நூல்** எனப் படுமே.

**நூலின் பெயர் :** (2)

1. பனுவல், 2. தந்து.

**பாடவேறுபாடு—விளக்கம்**

2. 3 தந்து நூலெனப்

3—4 குணமு நூலே. (165)

### 1304. துன்னத்தின் பெயர்

பொல்லம், (புரைஉறு) **துன்னம்** ஆகும்.

**துன்னத்தின் பெயர் :** (1)

பொல்லம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : புரையறு துன்னத்தின் பெயர், தையலின் பெயர்.

2 புரையறை

சொல்லந் தைத்தல் புரையறு துன்னம்—அச்சுப்பிரதி. (166)

## 1305. வாரின் பெயர்

வள்ளும் வகிடும் **வாரது** ஆகும்.

**வாரின் பெயர் :** (2)

1. வள், 2. வகிர்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

இந்நூற்பா 1323 ஆம் நூற்பாவாகிய நூலின் பெயரை அடுத்தும் சில பிரதிகளில் காணப்படுகிறது. (167)

## 1306. கயிற்றின் பெயர்

பாசமும், நாணும் **கயிறு**எனப் படுமே.

**கயிற்றின் பெயர் :** (2)

1. பாசம், 2. நாண்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

பாசமு நாணுங் குணமுங் கயிறே—அச்சுப்பிரதி.

இதனை அடுத்து முதற்பதிப்பாசிரியர் சேர்த்த இரு புதிய நூற்பாக்கள் வருமாறு :

**தாமணியின் பெயர்**

145. ★ தாமணி தாம்பே.

**காற்றாடியின் பெயர்**

146. ★ கழல் கழங்கு கதலி காற்றா டிக்காம். (168)

## 1307. கயிற்று வலையின் பெயர்

சாலம் என்பது **கயிற்றுவலை** ஆகும்.

**கயிற்றுவலையின் பெயர் :** (1)

சாலம். (169)



## 1308. தோற்செருப்பின் பெயர்

தொடுதோல், கழல், இவை **தோற்செருப்பு** ஆகும்.

**தோற்செருப்பின் பெயர் :** (2)

1. தொடுதோல், 2. கழல். (170)

## 1309. பாதுகை என்னும் பெயர்

அடியில் தொடுவன, **பாதுகை** ஆகும்.

**பாதுகை என்னும் பெயர் :** (1)

அடியில் தொடுவனவற்றிற்குரியது.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : பாதுகையின் பெயர், அடியிற்றொடுவனவற்றின் பெயர்.

2—4 றொடுவது பாதுக மாகும்.

3—4 பாதுகை மிதியடி—அச்சுப்பிரதி.

இதன் பின்னர் முதற்பதிப்பாசிரியர் பாடிச் சேர்த்த புது நூற்பாக்கள் 11 வருமாறு :

**மிதியடிக் கொட்டையின் பெயர்**

147. ★ குடைமிதி யடிமே லிட்ட கொட்டை.

**பற்சீவுங் கோலின் பெயர்**

148. ★ மெல்கோல் பற்சீவுங் கோலின் மேற்றே.

**தூண்டிலின் பெயர்**

149 ★ தூண்டில் வளிசம்.

**அம்மானையின் பெயர்**

150. ★ அம்மானை யம்மனை.

**தவிட்டின் பெயர்**

151. ★ முட்டை தவிடு முடையு மாகும்.

**நொய்யின் பெயர்**

152. ★ நொய் நொறுங்கு துவலும்.

**உலைத்துருத்தியின் பெயர்**

*153.* ★ அத்திரி யுலைத்துருத்திக் கடைத்த பெயரே.

**கொல்லு லைமுக்கின் பெயர்**

*154.* ★ குருகுஞ் சிவையுங் கொல்லுலை மூக்கே.

**செத்தையின் பெயர்**

*155.* ★ துரானால் காடு மயல்செத்தை சொல்லும்
துரால் நரல்—பிற்பதிப்புக்கள்.

**பாடையின் பெயர்**

156. ★ வெள்ளில் பாடை.

**சாணைக்கல்லின் பெயர்**

*157.* ★ சிலாவட்டஞ் சாணைக்கல். (171)

## 1310. நீர்தூவும் துருத்தியின் பெயர்

சிவிறி, சிறுதாரை, **நீர்தூவும் துருத்தி.**

**நீர் தூவும் துருத்தியின் பெயர் :** (2)

1. சிவிறி, 2. சிறுதாரை.

**பாடவேறுபாடு—விளக்கம்**

3 நீர்தூ வுந். (172)

## 1311. குடத்தின் பெயர்

இடங்கர், தசும்பு, கடம், கும்பம், **குடமே.**

**குடத்தின் பெயர் :** (4)

1. இடங்கர், 2. தசும்பு, 3. கடம், 4. கும்பம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

இதன் இரண்டாம் அடியாக,

கன்ன லென்றுங் கருதுவர் புலவர்

என அச்சுப்பிரதியில் காணப்படுகிறது.

ஒரு பிரதி இந்நூற்பாவைப் பின்வருமாறு இரண்டாகத் தருகிறது.



**தசும்பின் பெயர்**

இடங்கர் தசும்பு.

**குடத்தின் பெயர்**

கும்பங் குடமெனக் கூறல் வேண்டும். (173)

## 1312. கரகத்தின் பெயர்

கன்னல், சிரகம், **கரகம்** ஆகும்.

**கரகத்தின் பெயர் :** (2)

1. கன்னல், 2. சிரகம். (174)

## 1313. கன்னல் என்னும் பெயர்

பின்னும் **கன்னல்** குடப்பெயர் பெறுமே.

**கன்னல் என்னும் பெயர் :** (1)

குடம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

இந்நூற்பாவையும் முந்திய நூற்பாவின் (1332) இரண்டாம் அடியாகக் கொண்டும் சில பிரதிகளில் காணப்படுகிறது. அச்சுப்பிரதியில் 1311 ஆம் நூற்பாவுடன் இஃது இணைந்து காணப்படும். (175)

## 1314. பானையின் பெயர்

தடாவும், குழிசியும், மிடாவும் **பானை.**

**பானையின் பெயர் :** (3)

1. தடா, 2. குழிசி, 3. மிடா. (176)

## 1315. மிடாவின் பெயர்

அகளமும், தசும்பும், தடாவும், **மிடாவே.**

**மிடாவின் பெயர் :** (3)

1. அகளம், 2. தசும்பு, 3. தடா.

**பாடவேறுபாடு—விளக்கம்**

2. சும்பும், மயம்பும், வம்பும். (177)

## 1316. தாழியின் பெயர்

சாடி, அகளம், பதலை, **தாழி.**

**தாழியின் பெயர் :** (3)

1. சாடி, 2. அகளம், 3. பதலை.

**பாடவேறுபாடு—விளக்கம்**

2—3 யுதளம் பத்தல். (178)

## 1317. நீர்ச்சாலின் பெயர்

இடங்கர், வட்டம், நிறை, **நீர்ச் சாலே.**

**நீர்ச்சாலின் பெயர் :** (3)

1. இடங்கர், 2. வட்டம், 3. நிறை.

**பாடவேறுபாடு—விளக்கம்**

நிறை என்பதனை நீர்ச்சாலுக்கு அடைமொழியாகவும் கொள்ள இடமுண்டு. முதற்பதிப்பாசிரியரைத் தழுவி நிறை என்பது தனிப் பெயராகக் கொள்ளப்பட்டது.

இதனை அடுத்து முதற்பதிப்பாசிரியர் சேர்த்த இரு நூற்பாக்கள் வருமாறு :

**கொப்பரியின் பெயர்**

158. ★ கொப்பரி கடாரந் தசும்புங் கூறுப.

**தயிர்கடை தாழியின் பெயர்**

159. ★ குடாரமந் தினியொடு தயிர்கடை தாழி. (179)

## 1318. அகலின் பெயர்

சராவம், சுத்திகை, **அகல்**எனச் சாற்றுவர்.

**அகலின் பெயர் :** (2)

1. சராவம், 2. சுத்திகை.

**பாடவேறுபாடு—விளக்கம்**

2 சுத்தி 3—4 இடிஞ்சில் அகலே.

இதன்பின் முதற்பதிப்பாசிரியர் சேர்த்த மூன்று நூற்பாக்கள் வருமாறு :



**தகழியின் பெயர்**

160. ★ இடிஞ்சில் பாண்டி தகழிக் கியம்புவ.

**குடுவையின் பெயர்**

161. ★ குண்டங் குடுவை.

**சட்டியின் பெயர்**

162. ★ சட்டி விசளை. (180)

## 1319. இரப்போர்கலத்தின் பெயர்

கடிஞை, ஐயம், **இரப்போர் கலமே.**

**இரப்போர் கலத்தின் பெயர் :** (2)

1. கடிஞை, 2. ஐயம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

இதன்பின் முதற்பதிப்பாசிரியர் சேர்த்த புது நூற்பா ஒன்று வருமாறு :

**கொள்கல மெவற்றிற்கும் பெயர்**

163. ★ இடுங்கலம் பாண்ட மென்ப விரண்டுங்
கொள்கல மெவற்றிற்குங் கூறுங் கூற்றே. (181)

## 1320. மண்ணரிநாரின் பெயர்

மட்பகை, (குயவர்) **மண்அரி நாரே.**

**மண்ணரிநாரின் பெயர் :** (1)

மட்பகை.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : மட்பகை என்னும் பெயர். (182)

## 1321. கூறையின் பெயர்

மடியே, புட்டகம், மாறுகம், கலை, உடை
இலக்கர். கலிங்கம், சேலை, காடகம்,
காழகம், அறுவை, புட்டம், சாடி,

தானை, வாதனம், கோடிகம், அம்பரம்
ஆசாரம், ஆடை, தூசு, துகில், நீவி,
சம்படம், பட்டம், படாம் இவை கூறை.

**கூறையின் பெயர் : (25)**

1. மடி, 2. புட்டகம், 3. மாறுகம், 4. கலை, 5. உடை, 6. இலக்கர், 7. கலிங்கம், 8. சேலை 9. காடகம், 10. காழகம், 11. அறுவை, 12. புட்டம், 13. சாடி, 14. தானை, 15. வாதனம், 16. கோடிகம், 17. அம்பரம், 18. ஆசாரம், 19. ஆடை, 20. தூசு, 21. துகில், 22. நீவி, 23. சம்படம், 24. பட்டம், 25. படாம்.

**பாடவேறுபாடு - விளக்கம்**

தலைப்பு : புடவையின் பெயர்.

புட்டகம் ஆறுகம் என்றும் சில பிரதிகளில் பிரிக்கப்பட்டுள்ளது.

1 : 2 புட்டம்

3 : 3—4 வட்டஞ் சாடிமனவு, புடவை சாடி,
வட்டஞ்சாடி

5 : 3—4 துகில்தூசு தூவி

6 சம்படம் பட்டம் படாமிவை புடைவை.

6 : 3—4 படாம்பு புடைவை கூறை (183)

## 1322. பட்டாடையின் பெயர்

பாளிதம், கோசிகம், நேத்திரம், பட்டாடை.

**பட்டாடையின் பெயர் : (3)**

1. பாளிதம், 2. கோசிகம், 3. நேத்திரம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

இதனை அடுத்த நூற்பாவாகிய நல்லாடையின் பின் அச்சுப்பிரதி கொண்டுள்ளது. (184)



## 1323. நல்லாடையின் பெயர்

ஏடகம், புங்கம், பங்கம், இடையல்,
வேதகம், சில்லிகை, சித்திலிகை, சுத்தியம்,
நாகம், தூரியம், கருள், பரிரி, நல்லாடை.

**நல்லாடையின் பெயர் : (12)**

1. ஏடகம். 2. புங்கம், 3. பங்கம், 4. இடையல், 5. வேதகம், 6. சில்லிகை, 7. சித்திலிகை, 8. சுத்தியம், 9. நாகம், 10. தூரியம், 11. கருள், 12. பாரி.

**பாடவேறுபாடு—விளக்கம்**

1 : 4 மிடையல் என்றும் பிரிக்கலாம். முதற்பதிப்பாசிரியரைத் தழுவி இடையல் என்று கொள்ளப்பட்டது.

2 : 1 வேடகம் 3. சித்திகை, சித்திலைகை,

4 கத்தியம்.

இங்கு முதற்பதிப்பாசிரியர் சேர்த்த புது நூற்பாக்கள் மூன்று வருமாறு :

**பட்டு விகற்பத்தின் பெயர்**

164. ★ காம்பு பட்டு விகற்பங் கழறும்.

**நற்பணித்தூசின் பெயர்**

165. ★ தேவாங்க நற்பணித் தூசிற்குச் செப்புப.

**மயிர்ப்படாத்தின் பெயர்**

166. ★ மயிரக முரிக மயிர்ப்படா மாகும். (185)

## 1324. மரவுரியின் பெயர்

வற்கலை, சீரை, இறைஞ்சி, மரவுரி.

**மரவுரியின் பெயர் : (3)**

1. வற்கலை, 2. சீரை, 3. இறைஞ்சி. (186)

## 1325. செவ்வாடையின் பெயர்

கப்பலம், சிம்புளி, செம்படாம் ஆகும்.

**செவ்வாடையின் பெயர் :** (2)

1. கம்பலம், 2. சிம்புளி.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : செம்படாத்தின் பெயர், கம்பலத்தின் பெயர், கம்பளத்தின் பெயர்.

சிம்புளி செப்படாங் கம்பலமாகும். (187)

## 1326. முகபடாத்தின் பெயர்

குழி, **முகபடாம்.**

**முகபடாத்தின் பெயர் :** (1)

குழி. (188)

## 1327. மேற்போர்வையின் பெயர்

மீச்கோள், மேற்போர்வை.

**மேற்போர்வையின் பெயர் :** (1)

மீக்கோள்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

மீக்கோள், மீப்போர்வை, மேற்கோள் மீப்போர்வை.

முகபடாத்துக்கும் மேற்போர்வைக்கும் பெயர் என்னும் தலைப்பில் 1326, 1327 ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் கொள்வர்.

இதனை அடுத்து முதற்பதிப்பாசிரியர் இணைத்த மூன்று புதிய நூற்பாக்கள் வருமாறு :

**முன்றானையின் பெயர்**

167. ★ முன்றானை தோகை.

**கொய்சகத்தின் பெயர்**

168. ★ நீவியென் கிளவி மாதர் கொய்சகம்.

**கம்பளிப்படாத்தின் பெயர்**

169. ★ கம்பலங் கம்பள மென்ப விரண்டுங்
கம்பளிப் படாத்தின் கண்ண வாகும். (189)



## 1328. முலைக்கச்சின் பெயர்

வம்பு, விணிகை, பட்டிகை, வார்என்று
இங்குஇவை நான்கும் **கச்சு**என இசைப்பர்.

**முலைக்கச்சின் பெயர் :** (4)

1. வம்பு, 2. விணிகை, 3. பட்டிகை, 4. வார்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : கச்சின் பெயர்

1 : 2 விணிகை, பிணிகை.

வம்பு பிணிகை பட்டிகை வார்வட
மென்றிவை யைந்துங் கச்சென விசைப்பர்
—அச்சுப்பிரதி. (190)

## 1329. கச்சின்கடையின் பெயர்

சார்வாரம், **கச்சின்கடை.**

**கச்சின் கடையின் பெயர் :** (1)

சார்வாரம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : கச்சின் கடைக்கயிற்றின் பெயர், கச்சின் கயிற்றின் பெயர்.

2 கச்சின் கயிறு

சார்வாரங் கச்சின் கடைக்கயிறே—அச்சுப்பிரதி

கடைக்கயி றாகும் என்றும் பாடம்.

கஞ்சகஞ் சார்வாரங் கச்சின் கடையே—என ஒரு பிரதிப் பாடம். (191)

## 1330. உடுத்தலின் பெயர்

சுற்றுதல், **உடுத்தல்.**

**உடுத்தலின் பெயர் :** (1)

சுற்றுதல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தற்றலுடுத்தல், சுற்ற லுடுத்தல்—அச்சுப்பிரதி.

கச்சின் கயிற்றுக்கும் உடுத்தலுக்கும் பெயர் என்னும் தலைப்பில் 1349, 1350 ஆம் நூற்பாக்களை ஒன்றாகவும் கொள்வர். (192)

## 1331. உத்தரிகத்தின் பெயர்

**உத்தரிகம்,** ஏகாசம்.

**உத்தரிகத்தின் பெயர் :** (1)

ஏகாசம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : உத்தரியத்தரியத்தின் பெயர், உத்தரீயத்தின் பெயர்.

ஏகாசத்தின் பெயர்.

1 உத்தரியம், உத்தரீயம். (193)

## 1332. அத்தவாளத்தின் பெயர்

வடகம், **அத்தவாளம்.**

**அத்தவாளத்தின் பெயர் :** (1)

வடகம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

உத்தரியத்துக்கும் அத்தவாளத்துக்கும் பெயர் என்னும் தலைப்பில் 1331, 1332 ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் சிலர் கொள்வர். (194)

## 1333. மேற்கட்டியின் பெயர்

கம்பலம், விதானம், **மேற்கட்டி** ஆகும்.

**மேற்கட்டியின் பெயர் :** (2)

1. கம்பலம், 2. விதானம். (195)



## 1334. கூடாரத்தின் பெயர்

வானி, படங்கு என வகுத்தனர் புலவர்.

**கூடாரத்தின் பெயர் :** (2)

1. வானி, 2. படங்கு.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : படங்கின் பெயர்

2 படங்கெனவும்

1333—1334 இரு நூற்பாக்களும் மேற்கட்டியின் பெயர் என்பதன் கீழ் ஒரு நூற்பாவாகவும் சில பிரதிகளில் உள்ளன. அச்சுப்பிரதி, 'மற்று மேற்கட்டியின் பெயர்' என்னும் தலைப்பில் இந்நூற்பாவைக் கொண்டுள்ளது. (196)

## 1335. சட்டையின் பெயர்

மெய்ப்பை, காஞ்சுகி, கஞ்சுகம், வாரணம்,
குப்பாயம், அங்கி, **சட்டை** ஆகும்.

**சட்டையின் பெயர் :** (6)

1. மெய்ப்பை, 2. காஞ்சுகி, 3. கஞ்சுகம், 4. வாரணம், 5. குப்பாயம், 6. அங்கி.

**பாடவேறுபாடு—விளக்கம்**

2 கஞ்சுளி அச்சுப்பிரதி 4. வராணம் என்றும் படிக்கலாம். (197)

## 1336. இடுதிரையின் பெயர்

கண்டம். ஏமம், படாம், கஞ்சிகை, கழினி என்று
இங்குஇவை எழினியொடு படாகம் **இடுதிரை.**

**இடுதிரையின் பெயர் :** (7)

1. கண்டம், 2. ஏமம், 3. படாம், 4. கஞ்சிகை, 5. கழினி, 6. எழினி, 7. படாகம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : திரையின் பெயர்

1 : 4 கழனியென், கழுனியென்

2 : 3 படாமும், பராகம், 3, 4 படமிடுதிரை
—அச்சுப்பிரதி.

ஒடுபட மிடுதிரை—பிற்பதிப்புக்கள். (198)

## 1337. கொடியின் பெயர்

பதாகை, கேதனம், விலோதனம், கதலிகை,
படாகை, துவசம், துகிலே, வானி,
படங்கும், சருத்தியும் பாற்படுத்து இன்னவை
நுடங்கிய கொடி என நுவன்றிசி னோரே.

**கொடியின் பெயர் :** (10)

1. பதாகை, 2. கேதனம், 3. விலோதனம், 4. கதலிகை, 5. படாகை, 6. துவசம், 7. துகில், 8. வானி, 9. படங்கு, 10. சருத்தி.

**பாடவேறுபாடு—விளக்கம்**

2 : 3 துகிலிகை

3 : 1 படங்கு, படங்கமுந் 2. சரித்தியும், சத்தியும்

இதனை அடுத்து, 'அங்கமங் கொடியென வறைந்தனர் புலவர்' என ஒரு நூற்பா ஒரு பிரதியில் காணப்பட்டது. (199)

## 1338. சிறுகொடியின் பெயர்

கதலிகை சிறுகொடி ஆகக் கருதுவர்.

**சிறுகொடியின் பெயர் :** (1)

கதலிகை.

**பாடவேறுபாடு—விளக்கம்**

1 கத்திகை. (200)

## 1339. சீரையின் பெயர்

சிதவலும், சிதாரும் சீரை ஆகும்.

**சீரையின் பெயர் :** (2)

1. சிதவல், 2, சிதார்.



**பாடவேறுபாடு - விளக்கம்**

தலைப்பு : கந்தையின் பெயர்

1—2 சிதலுஞ் சிதரமும்

சிதவல் சிதார்துணி சீரை யாகும்.

சிதர் என்பது அச்சுப்பிரதிப் பாடம். (201)

## 1340. மெத்தையின் பெயர்

அணையும், தவிசும், தளிமமும் மூன்றும்
புனையும் மெத்தை எனப்புகன் றனரே.

**மெத்தையின் பெயர் :** (3)

1. அணை, 2. தவிசு, 3. தளிமம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

1 : 3—4 தளிமமிம் மூன்றும்.

இதனை அடுத்து முதற்பதிப்பாசிரியர் சேர்த்த புது நூற்பா மூன்று வருமாறு :

**தலையணையின் பெயர்**

170. ★ உபதானந் தலையணையுள்ளுங் கிளவி.

**வீதியிற் கட்டிய கொடியின் பெயர்**

171. ★ வீதியிற் கட்டிய கொடிப்பெயர் விடங்கம்.

**தேர்க்கொடியின் பெயர்**

172. ★ கூவிரந் தேரிற் றிகழ்கொடிக் கூற்றாம். (202)

## 1341. சித்திரப்படாத்தின் பெயர்

சித்திரப் படாமே பொத்தகம் ஆகும்.

**சித்திரப்படாத்தின் பெயர் :** (1)

பொத்தகம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : எழுத்துப் புடவையின் பெயர், பொத்தகத்தின் பெயர்.

பொத்தகத்தின் பெயர்—என்னும் தலைப்பில்,

கோசமு முறையு மிலேபமும் பொத்தகம்
சித்திரப் படமே பொத்தக மென்ப

என்றும் கொள்வர். ஆனால், இதன் முதலடி சில பிரதிகளில் இல்லை. (203)

## 1342. சித்திரத்தின் பெயர்

ஓவியம், வட்டிகை, துகிலிகை, என்று இவை
மேவிய **சித்திரம்** என்மனார் புலவர்.

**சித்திரத்தின் பெயர் :** (3)

1. ஓவியம், 2. வட்டிகை, 3. துகிலிகை.

**பாடவேறுபாடு—விளக்கம்**

1 : 4 யென்ன (204)

## 1343. எழுதலின் பெயர்

வரைதல், தீட்டல், பொறித்தல், இலேகை,
**எழுதற் பெயர்** என இயம்பினர் புலவர்.

**எழுதலின் பெயர் :** (4)

1. வரைதல், 2. தீட்டல், 3. பொறித்தல், 4. இலேகை

**பாடவேறுபாடு—விளக்கம்**

1 : 1 வரித்தல், 4. இரேகை.

இதன்பின் முதற் பதிப்பாசிரியர் சேர்த்த புது நூற்பா :

**இறுக்கலின் பெயர்**

173.★ தந்த விறுக்கல். (205)

## 1344. திவாகர வரலாறு

முன் தவப் பயனோ கற்ற அப் பயனோ,
சாபத்து இழுக்கிய தேவ சாதரில்
தோற்ற முடையன் என அம்பர்த் தோன்றிய
இயற்கைச் சேந்தன் திவாகரத்து ஏழாவது
**செயற்கை வடிவின் பெயர்த்தொகுதி** முற்றும்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

3 : 2—3 முடையன் அம்பர்த், 3—4 அம்பற் றோன்றிய
5 : 2 வடிவப், வடிவுப் (206)

எட்டாவது

# பண்பு பற்றிய பெயர்த்தொகுதி